Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60


# உதயன்

சுடர் : 39
கதிர் : 259

ஞாயிற்றுக்கிழமை
11 ஒகஸ்ட் 2024

ஆடி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"தேனில்லாத மொட்டில இனி வண்டுகள் இருக்காமல் பறக்கத்தானே செய்யும்"



# பிளந்தது பெரமுன

## புதுக்கட்சி ஆரம்பம்!

கொழும்பு, ஒகஸ்ட் 11

பொதுஜன பெரமுனவின் முடிவுக்கு மாறாக, ஜனாதிபதி ரணிலை ஆதரித்தவர்கள் இணைந்து அடுத்த வாரம் புதிய கட்சியை உருவாக்கத் தீர்மானித்துள்ளனர்.

15



# நம்பி வருவோரை கைவிடமாட்டேன்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 11

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் அனைவரினதும் அரசியல் எதிர்காலம் பாதுகாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

15

## விஜித் விஜயமுனி ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஒக. 11

ஜனாதிபதித் தேர்தலில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தீர்மானித்துள்ளார்.

மொனறாகலை, பிபிலையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் ரணிலை ஆதரிப்பது தொடர்பான அறிவிப்பை விடுத்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா, கட்டான தொகுதி அமைப்பாளராக விஜித் விஜயமுனி சொய்சா செயற்பட்டுவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

வேட்பாளர்கள்

## விதிமீறினால் பதவிக்கு 'ஆப்பு'

கொழும்பு, ஒக. 11

எந்தவொரு வேட்பாளரும் தேர்தல் சட்டங்களை மீறினால், ஜனாதிபதித் தேர்தலின் பின்னரும் அவர்களின் பதவிகளை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியும் என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி வேட்பாளர்கள் தேர்தல் விதிமுறைகள் மற்றும் தற்போதுள்ள அளவுகோல்களின் அடிப்படையில் ஒழுக்கத்துடன் செயற்படவேண்டும். அத்துடன் தேர்தல் சட்டத்தை மீறுவோருக்கு மூன்று வருட சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

15

## ஜனாதிபதித் தேர்தலுக்காக இரு தமிழர்கள் கட்டுப்பணம்

கொழும்பு, ஒக. 11

ஸ்ரீலங்காக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இரண்டு தமிழர்கள் இதுவரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக பலரும் தமது கட்டுப் பணங்களைச் செலுத்தி வருகின்றனர். இதுவரை

15

## ஜே.வி.பி.யின் விஞ்ஞாபனம் 26ஆம் திகதி வெளிவரும்!

கொழும்பு, ஒக. 11

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான விஞ்ஞாபனம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது என்று அந்தக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனமும் மாத இறுதிக்குள் முன்வைக்கப்படவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனமும் இறுதிப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## தேர்தல் தொடர்பில் 269 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஒக. 11

ஸ்ரீலங்கா ஜனாதிபதித்தேர்தலில், இதுவரை 269 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள்முதல் தினமும் ஒவ்வொரு தரப்பினருக்கும் எதிராகப் பல்வேறு முறைப்

15



நாகப்பட்டினம் – காங்கேசன் இடையே

## சிவகங்கை கப்பல் நேற்று வெள்ளோட்டம்!

யாழ்ப்பாணம், ஒக. 11

நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையில் எதிர்வரும் 15ஆம் திகதிமுதல் கப்பற்சேவை இடம்பெறவுள்ள நிலையில், அதற்கான வெள்ளோட்டம் நேற்று இடம்

15




நல்லூர் ஆலயச் சூழலில்

## தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் வாகனத்துடன் நுழைந்த பிக்கு

யாழ்ப்பாணம், ஒக. 11

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய சுற்றுவீதியில் வாகனங்கள் நுழைவதற்குத் தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், பிக்குகள் சிலர் வாகனங்களுடன் நுழைந்தமையால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

15

## முன்பள்ளி ஆசிரியர்கள் தவிர்க்க முடியாதவர்கள்

### வடக்கு ஆளுநர் பாராட்டு

ஒரு பிள்ளையின் கல்வி வாழ்க்கையில், முன்பள்ளி ஆசிரியர்களின் வகிபங்கு தவிர்க்கப்பட முடியாதது. பல்வேறு சவால்களுக்கு மத்தியில், மிகக் குறைந்த சம்பளத்தைப் பெற்று, குடும்பச் சுமையையும் தாங்கிக் கொண்டு அவர்கள் ஆற்றும்பணி மகத்தானது என்று வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

விரிவு - பக். 05

சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளரை ஏற்றுக்கொள்ளமாட்டோம்

## மக்கள் முன்னணி தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஓக. 11**

**தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற நோக்கோடு, தமிழர்களை நிரந்தர மாக தோல்வியடையச் செய்கின்ற வகையில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாது.**

-இவ்வாறு கட்சி அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் தமிழ் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்தி ரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பகிஷ்கரிப்பு என்ற முயற்சியை முழுமையாக தோற்கடித்து, தமிழர் களை ஏதோ ஒரு வகையில் இந்த தேர்தலில் வாக்களிக்கச் செய்வதற் கான முயற்சிகளில் பலதரப்பு களும் ஈடுபட்டு வருகிறார்கள்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற கருத்தை நாங்கள் அடியோடு நிரா கரிக்கின்றோம். இவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற நோக் கோடு, தமிழர்களை நிரந்தரமாக தோல்வியடையச் செய்கின்ற நோக்கத்தோடு இங்கே ஒரு வேட் பாளரைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டு அவரை பொதுவேட்பாளர் என்று சொல்வதை எந்த வகையி லும் ஏற்றுக்கொள்ளமுடியாது- என்றார். (ச-27)

# தேர்தல் காலத்தில் மக்கள் 'அலேர்ட்'

**கொழும்பு, ஓக. 11**

தேர்தல் காலங்களில் வெளிவரும் போலி விளம் பரங்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தேர்தல் ஆணைக்குழுவினரால் பல்வேறு வேலைவாய்ப் புகள் வழங்கப்படுவதாக பல்வேறு விளம்பரங்கள் வெளியாகி வருகின்றன.

பொதுமக்கள் அனைவரும் இத்தகைய போலி விளம்பரங்களை அழுத்திப் பார்வையிடுவதற்கு முன்னர் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

இவ்வாறான போலி விளம்பரங்கள் இணைய வழி மோசடிகளாகவும் இருக்கலாம் என இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு தெரிவித்துள் ளது. (ச-இ)

# மது விலை குறைப்பு நிறுவனங்கள் மறுப்பு

**கொழும்பு, ஓக. 11**

மதுபான விற்பனை வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து மதுபானங்களின் விலைகள் குறைக்கப்படவேண்டுமென முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு மதுபான உற்பத்தி நிறுவனங் கள் மறுப்புத் தெரிவித்துள்ளன. மதுவரித்தி ணைக்கள ஆணையாளர் சன்ன வீரக்கொடி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். (ஒ-6)

# தேர்தல் கடமைகளில் 2 லட்சம் அரச ஊழியர்

**கொழும்பு, ஓக. 11**

ஜனாதிபதித் தேர்தலுக்காக 2 லட்சத்து 25 ஆயிரம் அரச ஊழியர்கள் ஈடுபடுத் தப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணை யாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளி யாகும் வரை இந்த அதிகாரிகளின் சேவை அவசியம். இது தொடர்பாக மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அதிகாரிகளுடனும் கலந்துரையா டப்பட்டுள்ளது. கிராமஅலுவலர்களும் இதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங் குவதாக உறுதியளித்துள்ளனர்.

அத்துடன், தேர்தல் கடமைகளுக்காக சுமார் 54 ஆயிரம் பொலிஸ் உத்தியோ கத்தர்கள் மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. தேவைப் பட்டால் மட்டுமே இராணுவத்தினரின் ஆதரவு பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# ஆடம்பரச் செலவுகள் வேட்பாளர்களுக்கு 'கட்'

## தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்

**கொழும்பு, ஓக. 11**

ஜனாதிபதித் தேர்தலுக்காக நாடாளுமன்றில் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட பிரசார நிதிச் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு வாக் காளரின் பரப்புரைக்கும் தேர்தல்கள் ஆணையம் உச்சவரம் பைக் கொண்டுவரவுள்ளது.

இதன் காரணமாக, இந்த முறை ஜனாதிபதி வேட்பாளர்களின் ஆடம்பரமான செலவுகளுக்குத் தடை விதிக்கப்படவுள்ளது.

தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் புதிதாக அறிமுகப்படுத்தப் பட்ட பிரசார நிதிச்சட்டத்தின் அடிப்படையில் நடத்தப்படும் முதலா வது தேர்தலாகும். எதிர்வரும் 15 அன்று வேட்புமனுவை ஏற் றுக்கொண்ட பின்னர், வேட்பாளர்கள் எவ்வளவு பணம் செலவ ழிக்க முடியும் என்பது அனைத்துப் போட்டியாளர்களுடனும் கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)



# தமிழரைத் திசைதிருப்புவது அரசின் அட்டூழியங்களே

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 11**

தமிழ் மக்கள் விரும்பாத சில செயற் பாடுகளை அரசு முன்னெடுப்பதனா லேயே தமக்கென தனி இராஜ்ஜிய மொன்று அமைக்கவேண்டும் என்ற மனோநிலை இன்றுவரை வடக்கு மக் கள் மத்தியில் காணப்படுகின்றது. இவ் வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப் பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவர் கள மிறக்கப்பட்டுள்ளார், இது தேவையற்ற விடயமாகும்,

வடக்கில் தமிழ் மக்கள் விரும்பாத சில செயற்பாடுகளை அரசு முன்னெடுக்கின் றது. எனவே, மத ஆக்கிரமிப்பு உட்பட தேவையற்ற விடயங்களை ஏற்படுத் தாது, அனைவரும் நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் - என்றார். (ச-44)

# பொருளாதார நெருக்கடி ஏற்பட காரணமானோர் தண்டிக்கப்படுவர்

## சஜித் சூளுரை

**கொழும்பு, ஓக. 11**

நாங்கள் பதவிக்கு வந்ததும் நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத் தியவர்களை நீதியின் முன் நிறுத்தி தண்டனை வழங்குவோம் என எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை சுகததாச உள்ளக அரங்கில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் உட்பட சஜித்துக்கு ஆதர வளிக்கும் கட்சிகளுடன் இணைந்து அமைக்கப்பட்ட கூட்டணியின் ஆரம் பக் கூட்டத்திலேயே சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஊழல் மோசடி வழியாகப் பெற்று கொண்ட ஒவ்வொரு டொலரையும், ரூபாவையும் மீண்டும்... நடவடிக்கைகளை நாங்கள் மேற்... கொள்வோம். ஏற்றுமதிப்பொருளா தாரத்தை நாங்கள் கட்டியெழுப்ப வுள்ளோம். செப்ரெம்பர் 22ஆம் திகதி இலங்கையிலுள்ள 341பிரதேச சபைகளிலும் உற்பத்தித்துறை சார்ந்த தொழிற்சாலைகள் உருவாக் கப்படும்.

1989ஆம் ஆண்டு ரணசிங்க பிரேம தாஸ அறிமுகம் செய்த ஜனசவிய போன்ற வறுமை ஒழிப்புத் திட்டத்தை அறிமுகம் செய்து நாட்டில் வறு மையை இல்லாமல் செய்வோம்.

எமது வெற்றி மக்களின் வெற்றி. வெற்றி பெறுவோருக்கு அமைச்சு பதவிகளை வழங்குவதல்ல எமது நோக்கம். 22 மில்லியன் மக்களை யும் பொருளாதார நெருக்கடியி லிருந்து விடுவிப்பதே எமது நோக்கம் - என்றார். (ஒ-6)

# மாணவி மீது துர்நடத்தை!

## 22 மாணவர்கள் கைது

**கொழும்பு, ஓக. 11**

தனமல்வில பிரதேசத்தில் பாடசாலை மாணவி ஒருவர், அதே பாடசாலையில் கல்வி கற்கும் 22 மாணவர்களால் பாலி யல் துர்நடத்தைக்குட்படுத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு வருடமாக குழுவாக இணைந்து, தன்னை தவறான செயற்பாட்டுக்கு உட் படுத்தியதாக குறித்த மாணவி வாக்குமூ லம் வழங்கியுள்ளார். அதன்படி சம்பவத் துடன் தொடர்புடைய 22 மாணவர்கள் மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தவர் கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருத்துவர்களின் அசண்டை; நீதியை நிலைநாட்டுங்கள்!

## புலம்பெயர் அமைப்புகளும் சுகாதார அமைச்சுக்கு கடிதம்

மன்னார் , ஓக. 11

**மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் தாதியர்களின் அசமந்தப் போக்கால் உயிர்பிரிந்ததாகக் கூறப்படும் இளம்தாய் சிந்துஜாவின் இறப்பு தொடர்பான விசாரணை யாவும் நீதியான முறையில் நடப்பதை உறுதிசெய்ய வேண்டும்.**

-இவ்வாறு ஐக்கிய இராஜ்சியத்தில் செயற்படும் மன்னார் நலன்புரி சங்கத்தினர் மற்றும் பிரான்ஸ் நாட்டில் செயற்பட்டு வரும் மன்னார் நலன்புரி சங்கத்தினர் உள்ளிட்டோர் இலங்கை ஜனாதிபதி மற்றும் இலங்கை சுகாதார அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அதில் மேலும் உள்ளதாவது: தவறிழைத்தவர்கள் மீது காலதாமதம் இன்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அரசியல் ரீதியிலும் சரி நிர்வாக ரீதியிலும் சரி நீதியை நிலை நாட்டுவதில் எப்பொழுதும் தோற்றே போகிறது இலங்கையின் ஜனநாயகம்.

தொடர்ந்து உண்மைகளை மூடி மறைத்தால் அரச மருத்துவமனைகள் மீது மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டுவிடும். மன்னார் மருத்துவமனையில் உயிரிழந்த இளம் தாய் சிந்துஜாவின் மரணம் தொடர்பான விசாரணை மழுங்கடிக்கப்படுவதாக தெரியவருகின்றது. சம்பவத்தன்று பணியாற்றியவர்கள் மன்னார் மாவட்டத்திற்குள் உள்ளக இடமாற்றம் செய்யப்பட உள்ளதாக அறிகிறோம். ஆகவே நீதி நிழலாடும் பட்சத்தில் மருத்துவமனைக்கெதிரான தொடர் போராட்டத்தை மேற்கொள்வோம் - என்றுள்ளது. (ச-56,213)




# பொலிஸ் அதிகாரிகளுக்கு தேர்தல் பணி தெளிவூட்டல்

கொழும்பு, ஓக. 11

தேர்தல் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு தெளிவூட்டப்படவுள்ளது.

வடமத்திய, வடக்கு மற்றும் தென் மாகாண பொலிஸ் அதிகாரிகளுக்கு இந்த தெளிவூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தேர்தல் ஆணையாளர் மற்றும் பொலிஸ் சட்டப் பிரிவினர் ஆகியோர் இந்த தெளிவூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 11

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு சிறிலங்கா மஹாஜன கட்சி தீர்மானித்துள்ளது.

கட்சியின் அரசியல் குழுக்கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது என்று மஹாஜன கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அசங்க நவரத்ன தெரிவித்தார். பெரமுன கூட்டணியிலிருந்து வெளியேறிய பின்னர், ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் குறித்த கட்சி அரசியல் உறவை பேணிவந்த நிலையிலேயே, தற்போது ஜனாதிபதி ரணிலிடம் சரணடைந்துள்ளது. (ஒ-44)




## அழகுக் கந்தன் நல்லூரான்

அன்பின் உருவான கந்தனுக்கு
வழமை போல இந்த ஆண்டிலுமே
வண்ணத் தேரினிலே எடுத்துவந்த
அழகிய சேவற்கொடிச்சேலை
ஆடிப் பறந்தோடி விளையாடி
மழலை போல்தவழ மரத்துடனே
அணைத்துக் கட்டிதெரு வெல்லாமும்

இன்ப ஒலிபொங்க அதிகாலை
இனிய மாலை வே றின்றிமக்கள்
அன்பால் வள்ளிமணாளன் உன்னை
அருமை யானமலர் கொண்டுவந்தே
உன்தா ளில்கொட்டிப் பரவிவர
உலகை மறந்தே உ லவுகின்றார்
மண்ணில் நித்தமுன்றன் பக் தர்களே
மரகத மணிபோன்ற வனேகந்தா

திருவிழா உனக்கே ஆனதாலே
திக்கெல்லா மிருந்து பக்தர்கள்
ஒருமிக்க கூடிவந்த தாலிங்கே
ஒன்று மில்லா ஏ ழைவாழ்வில்
தருவாய் இருந்துகுடை பிடித்திங்கு
வரமாய் காக்கின்றாய் ஆண்டவா
அருமாய் உருவமாய்வந் துகாத்தாயே
அயில் வேந்தனே முருகையனே

*ரஜிதா அரிச்சந்திரன்*

# சமாதான நீதிவானாக நியமனம்





யாழ்ப்பாணம், ஓக. 11

கைதடி சேது காவலர் வித்தியாலய அதிபரும், மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலைய முன்னாள் தலைவரும் தற்போதய கணக்காய்வாளரும், ஆலோசகருமான செல்லத்துரை சிறிஸ்கந்தராசா சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் கடந்த 6ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராசா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (ச-9)

## ரூ. 2000 இலஞ்சம் பெற்ற பொலிஸுக்கு 8 ஆண்டு சிறை

டிப்பர் வாகனச் சாரதியிடம் 2 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற பிலியந்தலை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு 8 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார். (ச-இ)

# நல்லூர்த் திருவிழாவின் 3 ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 11

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழா காலத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் மாலை 4 மணியில் இருந்து 8 மணிவரை சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இன்று நடைபெறவுள்ள 3 ஆம் நாள் நிகழ்வில் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் சா. சுதர்சன் பிரதம அதிதியாகவும் சிறப்பு அதிதியாக யாழ்.மாவட்டச் செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்தியமூர்த்தி மற்றும் யாழ்ப்பாணம் செந்தில் கதிர் வேலாயுதசுவாமி தேவஸ்தானச் செயலாளர் விநாயகமூர்த்தி ஸ்ரீசக்திவேல் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கொழும்புத்துறை வதிரி பீட விநாயகர் அறநெறிப்பாடசாலை, இலக்கண சுவாமிகள் அறநெறிப்பாடசாலை, ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விஷேட நிகழ்வாக திருமதி விஜிந்தன் நெறியாள்கையில் கீதவாஹினி இசைக்கல்லூரி வழங்கும் வாத்திய சங்கமம் இடம்பெறவுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா வடக்கு வலய சாரண ஆசிரியர்களுக்கு கலைக்கூறு - 1 பயிற்சி வவுனியா மாவட்டச் சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஓமந்தை மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. வவுனியா மாவட்ட சாரண ஆணையாளர் யோ.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற பயிற்சிநெறியில் பயிற்சித் தலைவராக ப.அஜித்குமார், உதவிப் பயிற்சித் தலைவர்களாக ரா.வரதராஜா, யோ.கேதீசன் ஆகியோர் பயிற்சிநெறிகளை வழங்கினர்.

நிகழ்வில், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் உதவி மாவட்ட ஆணையாளர்கள் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். (ரி-18)

## கண்காட்சி



யாழ்ப்பாணம், ஓக.11

சங்கானை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் போஷாக்கு கண்காட்சி 'இன்னவ்' எனும் தொனிப்பொருளில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் பிரதான மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

சங்கானை பிரதேச சுகாதார மருத்துவப் பணிமனை மற்றும் வேள்ட்விஷன் நிறுவனம் இணைந்து கண்காட்சியை ஏற்பாடு செய்த நிலையில் தாய்மார் கழகங்களால் போஷாக்கு உணவுகள் விழிப்புணர்வுக்காக காட்சிப்படுத்தபட்டதுடன் விற்பனையும் இடம்பெற்றது.

நிகழ்வில் சங்கானை சுகாதார மருத்துவப் பணிமனையினர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், வேள்ட்விஷன் நிறுவனத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-125)


## கௌரவிப்பு நிகழ்வு





கொடிகாமம், ஓக.11

வரணி மத்திய கல்லூரியின் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு கல்லூரி முதல்வர் ஆ. தங்கவேலு தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.வரணி மத்திய கல்லூரியில் 2023 க.பொ.த.(உ/த) பரீட்சையில் தோற்றி முதன்முதலாக மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகியுள்ள வசிஹா சிவராசா மற்றும் பொறியியல் பீடத்துக்குத் தெரிவாகியுள்ள 2 மாணவர்களும், கலைப்பிரிவில் 3 A சிறப்புச்சித்தி பெற்ற 4 மாணவர்கள்,ஏனைய சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட 9 மாணவர்களுமாக மொத்தம் 16 மாணவர்கள் கல்லூரி சமூகத்தால் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயிர் இரசாயனவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியரும், முன்னைநாள் துணைவேந்தரும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிர்வாக உறுப்பினருமான பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பங்கேற்றார். (ச-45-159)





தெல்லிப்பழை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் ஆடிப்பூர உற்சவம் கடந்த புதன்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. பூசை வழிபாடுகள், மஹா சண்டியாகம் என்பன இடம்பெற்று அதனைத் தொடர்ந்து கன்னியா பூசை, குமாரி பூசை, சுமங்கலிப் பூசை, தம்பதி பூசை என்பனவும் அடியவர்கள் பாற்காவடியும் இடம்பெற்றன.. (ச-25-66)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.11

மூன்றாம் நிலை முறைசாராக் கல்வி, தொழில்சார் பயிற்சி முறைமை மூலம் மாணவர்களை முன்னேற்றுதல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-25-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி ஆசிரியர்களே மிக முக்கியமானவர்கள்



## வடக்கு ஆளுநர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஓக. 11

**பல்வேறு சவால்களுக்கு மத்தியில், மிகக் குறைந்த சம்பளத்தைப் பெற்று, குடும்பச் சுமையையும் தாங்கிக் கொண்டு நீங்கள் ஒரு மிகப்பெரிய பணியை செய்து கொண்டிருக்கிறீர்கள். அதற்காக வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் அத்தனை முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் கௌரவத்துடன் வாழ்த்துகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம் -இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.**

வட மாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்றது.

ரோட்டரிக் கழகத்தின் அனுசரணையுடன் ஆறுதல் அமைப்பால் பயிற்றுவிக்கப்பட்ட 337 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இதன்போது டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பிரதம விருந்தினராகப் பங்கேற்ற வடக்கு ஆளுநர் அங்கு மேலும் தெரிவித்தாவது:-

ஒரு சிற்பத்தைச் செதுக்குவதற்கும், குழந்தைகளை உருவாக்குவதற்கும் பாரிய வித்தியாசங்கள் இல்லை. குழந்தை பிறந்தது முதல் 7 வயதுக்குள் தனக்குத் தேவையான அத்தனை விடயங்களையும் கற்றுக் கொள்வதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். எனவே, குழந்தை களின் முக்கியமான காலப்பகுதியை நீங்கள் உங்களுடன் இணைத்துக் கொண்டுள்ளீர்கள். நீங்கள் ஆற்றுகின்ற பணி மிக முக்கியமானது. உங்களுக்கான மறுசீரமைப்புகளை கல்வி அமைச்சு தற்போது மேற்கொண்டு வருகிறது.

உங்களுடைய கோரிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சுடன் பல தடவைகள் நாங்கள் கலந்துரையாடி இருக்கின்றோம். புதிய கல்விச் சீர்திருத்தத்தில் முன்பள்ளிகளுக்கான செயற்பாடுகள் மற்றும் உங்களை சேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம். நாட்டின் பல்வேறு மறுமலர்ச்சித் திட்டங்களுக்குள் கல்வி மறுமலர்ச்சியும் ஏற்படவேண்டும். பல்வேறு சவால்களுக்கு மத்தியில் 'ஆறுதல்' நிறுவனத்தின் ஊடாக வடக்கு, கிழக்கில் சேவையாற்றக்கூடிய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பாடநெறி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்காக அனுசரணை வழங்கும் ரோட்டரிக் கழகத்துக்கும் அதேபோல இந்தச் செயற்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் 'ஆறுதல்' நிறுவனத்துக்கும் வடக்கு மாகாணம் சார்பில் எமது நன்றிகளைக் கூறிக் கொள்கிறோம்- என்றார். (ஒ-26)

## வரணி மருத்துவமனையில் இயங்காதுள்ள பிரசவ விடுதி


யாழ்ப்பாணம், ஓக. 11

வரணி மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்ட பிரசவ விடுதிக் கட்டடம் இன்னமும் திறக்கப்படாமலுள்ளது என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

1967ஆம் ஆண்டு அங்கு மத்திய மருந்தகத்துடன் பிரசவ விடுதி நிர்மாணிக்கப்பட்டு இயங்கி வந்த நிலையில் மருத்துவமனைக்கென புதிதாக பிரசவ விடுதி நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. ஆனால் இதுவரை இயங்காமல் மூடப்பட்டே காணப்படுகிறது.

மருத்துவமனைக்கு வரும் கர்ப்பிணிகள் சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கே அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

எனவே இந்த அசௌகரிய நிலையை கருத்திற் கொண்டு உரிய அதிகாரிகள் வரணி மருத்துவமனையில் திறக்கப்படாதுள்ள பிரசவ விடுதியை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-9)



## சுமந்திரனைச் சந்தித்த நாமல்

கொழும்பு, ஓக. 11

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்சவும் நேற்று முற்பகல் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

சுமந்திரனை கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நாமல் ராஜபக்ச சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பில் பொதுஜன பெரமுனவின் செயலர் சட்டத்தரணி சாகர காரியவசம் இணைந்துகொண்டிருந்தார்.

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக இந்தப் பேச்சில் கலந்துரையாடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் பேச்சு நடத்த தாம் எதிர்பார்ப்பதாக நாமல் ராஜபக்ச இந்த சந்தர்ப்பத்தில் கூறியதாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

## ஷானிக்குப் பாதுகாப்பு நீதிமன்று உத்தரவு!

கொழும்பு, ஓக. 11

இலங்கையின் குற்றவியல் வரலாற்றில் பல சர்ச்சைக்குரிய விசாரணைகளை நடத்திய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பணிப்பாளரின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பான புலனாய்வு அறிக்கைகளை கருத்திற்கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. (ச-இ)

## மதுபோத்தல்களுக்கு புதிய 'ஸ்ரிக்கர்'

கொழும்பு, ஓக. 11

மதுபானப் போத்தல்களுக்குப் பயன்படுத்தப்படும் பாதுகாப்பு ஸ்ரிக்கரை ஒக்ரோபர் முதலாம் திகதியில் இருந்து மாற்ற கலால் திணைக்களம் தீர்மானித்துள்ளது. அதன்படி, தற்போது பயன்படுத்தப்படும் ஸ்ரிக்கர்களில் தற்போது காணப்படும் பலவீனங்கள், அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முறையில் தவிர்க்கப்படும் என்றும் கலால் ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## காணாமல் ஆக்கப்பட்டோர்: 15 ஆயிரம் முறைப்பாடுகள்

வவுனியா, ஓக. 11

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தில் இதுவரை 14 ஆயிரத்து 988 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் ஆணையாளர் ரி.யோகராஜா தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளோர் தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்யும் செயற்பாடு நேற்று இடம்பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை நாம் காலத்தின் அடிப்படையில் மூன்று பகுதிகளாக பிரித்துள்ளோம். இவற்றில் நாம் இறுதிக் கட்டத்தை நெருங்கியவையாக 5 ஆயிரத்து 791 முறைப்பாடுகளை அடையாளப்படுத்தியுள்ளோம்.

வவுனியா பிரதேச செயலகத்தில் 75 முறைப்பாட்டாளர்கள் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 34 விண்ணப்பதாரர்கள் வருகை தந்திருந்தனர். அவர்களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன.

மன்னாரில் இதேபோன்று விசாரணைகள் இன்று இடம்பெற உள்ளன. மன்னாரில் 78 முறைப்பாட்டாளர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள்- என்றார். (ஒ-110)

## ரூ. 1700 வழங்குவதற்கு 7 கம்பனிகள் இணக்கம்

கொழும்பு, ஓக. 11

7 கம்பனிகள் 1700 ரூபா சம்பளத்தை வழங்க முன்வந்துள்ளதாகவும் எதிர்வரும் திங்களன்று சம்பள நிர்ணயசபை கூடித் தீர்மானிக்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தோட்டத் தொழிற்சங்கங்களின் இளம் தலைவர்களின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

தேவையேற்பட்டால் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த சிறப்பு சட்டங்களையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிஜிற்றல் கல்விக்கு சீனாவின் நிதியுதவி

கொழும்பு, ஓக. 11

நாட்டின் சாதாரண தரக் கல்வியை டிஜிற்றல் மயமாக்கும் நோக்கில் சீன அரசாங்கத்திடமிருந்து 20 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்றுள்ளதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதன்படி, அடுத்த ஆண்டு முதல் பாடசாலைக் கல்வியை டிஜிற்றல் மயமாக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இதற்காக நாடளாவிய ரீதியில் உள்ள 500 பாடசாலைகள் தெரிவு செய்யப் பட்டுள்ளன என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ச-இ)



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் ஆடிப்பூரத் திருவிழா கடந்த புதன்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் இடம் பெற்றது. ஆடிப்பூரத்தை முன்னிட்டு துர்க்கை அம்பாள் அழகிய தேரில் அடியவர்கள் புடைசூழ உள்வீதியில் எழுந்தருளினார். (ச-25,66)

## கருத்தரங்கு

கொடிகாமம், ஓக.11

கைதடி கிழக்கு சனசமூக நிலைய இந்து வாலிபர் சங்கம் நடத்தும் அமரர் சு.பரமேஸ்வரன் ஞாபகார்த்த புலமைப் பரிசில் பரீட்சை கருத்தரங்கு கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 1.30மணி வரை நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் 2024 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டது. (ரி-159)

## கெஹலிய வழக்கு: முடிவு செப்ரெம்பரில்

கொழும்பு, ஓக. 11

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வழக்குத் தொடர்பான முடிவு செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி அறிவிக்கப்படும் என மூன்று பேர் அடங்கிய நீதிபதிகள் குழாம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

தரமற்ற நோய் எதிர்ப்பு மருந்துகளைக் கொள்வனவு செய்தமை தொடர்பில் விசாரணைமுடியும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவை நீக்குமாறு உயர்நீதிமன்றத்தில் கெஹலிய ரம்புக்வெல தரப்பில் இருந்து மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிலையில் கெஹலிய ரம்புக்வெல முன்வைத்த மனு விசாரணைக்கு அனுமதிக்கப்படுமா? இல்லையா? என்பது தொடர்பான தீர்ப்பு அன்றைய தினம் அறிவிக்கப்படும் என்றும் நீதிபதிகள் குழாம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## பொன்சேகா பதவி அர்ஜுனவுக்கு?

கொழும்பு, ஓக. 11

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் தொகுதி அமைப்பாளர் பதவியை முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுக்கு வழங்குவது குறித்து பேச்சு முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் களனித் தொகுதி அமைப்பாளராக சரத் பொன்சேகா கடமையாற்றியிருந்தார்.

எனினும் தொகுதி அமைப்பாளர் மற்றும் கட்சியின் தவிசாளர் ஆகிய பதவிகளை, சரத் பொன்சேகா துறந்திருந்தார்.

அந்தவகையில் களனித் தேர்தல் தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் பதவியை அர்ஜுனவுக்கு வழங்குவது குறித்து கட்சி உள்வட்டாரங்களில் பேசப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வழியில் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**இடபம்:** பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குல தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். ஆதாயம் உண்டாகும். பணஉதவி கிடைக்கும்.

**சிம்மம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். மகிழும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். அரவணைத்துச் செல்வது அவசியம். உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். உடல்நலனில் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்தபடி இருக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண் விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மீனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிணக்குகள் நீங்கும்.



## காலபோக நெற்செய்கை விவசாயிகள் பதிவுசெய்க

யாழ்ப்பாணம், ஓக. 11

கோப்பாய், நீர்வேலி, இருபாலை போன்ற இடங்களில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் காலபோகத்துக்கான பதிவை உடன் மேற்கொள்ளுமாறு உரும்பிராய் கமநல விவசாயக் குழுவின் தலைவர் அ.போரின்பநாயகம் கேட்டுள்ளார்.

நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் விவரங்களை கணினி மயப்படுத்தும் செயன்முறைக்குள் கொண்டு வரும் நோக்கில் கமநலசேவைகள் திணைக்களம் இந்த நடவடிக்கை எடுத்துள்ளது. (ச-17)

### வர்த்தக மேம்பாட்டுக்கு
## கனடா- யாழ்ப்பாணம் ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஓக. 11

இலங்கை கனடா வர்த்தக சம்மேளனமும் யாழ்ப்பாண வணிகர் கழகமும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுள்ளன.

பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் குறித்த ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாண வணிகர் கழகம், யாழ்ப்பாண முகாமையாளர் நிறுவனம், யாழ்ப்பாண முகாமைத்துவ கழகம் மற்றும் திருகோணமலை வர்த்தக அமையம் ஆகிய நிறுவனங்கள் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-20-27)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழரசின் முடிவென்ன?

தமிழ்த் தேசியத்தின் குறியீடாகவே தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டிருக்கின்றார். தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலிருக்கின்ற சிவில் அமைப்புகள் - அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் பொதுவேட்பாளராக அரியநேந்திரன் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கவுள்ளார். அரியநேந்திரன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமல்ல, அவர் அந்தக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரும்கூட.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி இதுவரையில் நிலைப்பாடு எதையும் எடுக்கவில்லை. அந்தக் கட்சியின் மத்திய குழு இன்று கூடுகின்றது. இதில் முடிவு எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டாலும் அந்தக்கட்சி இதுவரை காலமும் எந்தவொரு முக்கியமான விடயங்களுக்குமான தீர்மானத்தை உடனடியாக எடுப்பதில்லை. இழுத்தடித்து காலத்தைக் கடத்தியே தீர்மானங்கள் எடுத்து வந்திருக்கின்றது.


இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்காமலேயே, தமிழ்ப் பொது வேட்பாளரை தோற்கடிப்போம் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், மத்திய குழு உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் பகிரங்க பொதுக்கூட்டத்தை கூட்டிக்கூறியிருந்தார். கட்சி எந்தவொரு தீர்மானமும் எடுக்க முன்னரே, தனது நிலைப்பாட்டை பகிரங்கவெளியில் கூறியது மாத்திரமல்லாது, தமிழ்ப் பொதுவேட்பாளரை தோற்கடிப்பேன் என்ற ஒரு முடிவையும் கூறியிருந்தார். அதற்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இப்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவரே தமிழ்ப் பொதுவேட்பாளராக களமிறக்கப்பட்டுள்ள நிலையில் அந்தக் கட்சியின் மத்திய குழு என்ன முடிவை எடுக்கப்போகின்றது? இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள், தமிழ்ப் பொதுவேட்பாளருக்கான ஆதரவை தற்போதைய தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சி.சிறீதரன் ஆகியோர் பகிரங்கமாக முன்வைத் திருந்தனர். அந்த நிலைப்பாட்டை கட்சியிலுள்ள பலரும் ஆதரிக்கின்றனர். ஆனால் சுமந்திரனும் அவரை ஆதரிப்பவர்களும் மாத்திரம் தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்ப்பதுடன் அவரைத் தோற்கடிக்கவேண்டும் எனவும், சிங்கள வேட்பாளர்களுடன் பேரம் பேசவேண்டும் எனவும் திரும்பத் திரும்பச் சொல்கின்றனர்.

சிங்கள வேட்பாளர்களுடன் பேரம் பேசி 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலங்களில் என்ன நடந்தது என்பதை சுமந்திரன் பகிரங்கப்படுத்தவேண்டும். சுமந்திரனும், மறைந்த இரா.சம்பந்தனும் தன்னிச்சையாக பல பேரம்பேசல்களை முன்னெடுத்து அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிவடைந்திருந்தன. குறிப்பாக சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினரான 2010ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் வந்ததிலிருந்து தீர்மானம் எடுக்கும் சக்தியாக தன்னைக்காட்டிக்கொண்டு எடுத்த தீர்மானங்கள் அனைத்தும் தமிழினத்தை புதைகுழிக்குள் தள்ளியது மாத்திரமல்லாமல், தமிழரசுக் கட்சியையும் கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு கொண்டு வந்து விட்டிருக்கின்றது.

சுமந்திரன் - சம்பந்தன் இணை 2015ஆம் ஆண்டு இதயத்தால் இணைந்த ஒப்பந்தத்தை மைத்திரியுடன் ஏற்படுத்திக்கொண்டதாகட்டும், புதிய அரசமைப்பு உருவாக்கம் என்று சொல்லி ஒற்றையாட்சிக்குள் தமிழர் அரசியலை முடக்க எடுத்த முயற்சியாகட்டும் அனைத்தும் பின்னடைவான நகர்வுகளாகவே அமைந்தன. அதனால்தான் போரின் பின்னர் கோலோச்சி வந்த தமிழ் அரசுக் கட்சி சிக்கிச் சின்னாபின்னமாகி இன்று பத்தோடு பதினொன்றாவது கட்சியாகியிருக்கின்றது.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவினர் இனியும் சுமந்திரன் சொல்வதைக் கேட்டு முடிவெடுத்து தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளிக் கொட்டப் போகின்றனரா? இல்லை தமிழ் மக்கள் நலன் சார்ந்து தீர்மானம் எடுத்து முதுகெலும்புடன் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளப்போகின்றனரா என்பதை பெரும்பாலும் தெரியவரலாம்.



# தமிழரசின் முடிவுதான் தமிழர்களின் முடிவும்

## கூறுகிறார் இராதாகிருஷ்ணன்

**கொழும்பு, ஓக. 11**

**ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முடிவையே வடக்கில் பெரும்பாலான தமிழர்கள் ஏற்பார்கள் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.**

அவர்மேலும் தெரிவித்ததாவது- தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் ஈடுபட்டுவருகின்றனர். தமிழரசுக் கட்சியின் முடிவையே பெரும்பாலான தமிழர்கள் ஏற்பார்கள். வெல்லும் ஜனாதிபதியை ஆதரிக்கும் முடிவையே அவர்கள் எடுப்பார்கள் என நம்புகின்றோம். எமது பார்வையில் வெல்லும் ஜனாதிபதி சஜித் பிரேமதாஸ- என்றார். (ஒ-44)

## அவசர கடவுச்சீட்டுக்கே விண்ணப்பியுங்கள்!

கொழும்பு, ஓக. 11

கடவுச்சீட்டு அவசரமாகத் தேவைப்பட்டால் மாத்திரம் தற்போது விண்ணப்பியுங்கள். கடவுச்சீட்டு அவசரமாக தேவைப்படாதவர்களை ஒக்ரோபர் வரை காத்திருங்கள் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒக்ரோபர் மாதத்திலேயே சர்வதேசதராதரத்துடனான கடவுச்சீட்டுகள் வழங்கப்படும்.

புதிய கடவுச்சீட்டில் உரிமையாளரின் அனைத்து விடயங்களையும் சேமித்துவைக்கும் மைக்ரோசிப் காணப்படும். இது உலகெங்கிலும் உள்ள விமான நிலையங்களில் உரிமையாளர் குறித்த தகவல்களைப் பெறுவதை இலகுவாக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

## வாழ்க்கைச்செலவு 3 மடங்காகியது

கொழும்பு, ஓக. 11

கடந்த பத்து வருட காலத்தில் இலங்கையில் வறுமை மும்மடங்கு அதிகரித்துள்ளதாக புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2012 காலப்பகுதியில் 5 ஆயிரத்து 223 ரூபாவாக இருந்த தனிநபர் வாழ்க்கைச்செலவுப்படி, 2023ஆம் ஆண்டு ஜனவரியில் 15 ஆயிரத்து 970 ரூபவாக அதிகரித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்கள் இலங்கையிலேயே வாழ்க்கைச் செலவுகூடிய மாவட்டங்களாகக் காணப்படுகின்றன. (ஒ-6)

## சமூக ஊடகங்கள் தீவிர கண்காணிப்பு

கொழும்பு, ஓக. 11

தேர்தல் காலத்தில் சமூக ஊடகங்கள் மீது விசேட கவனம் செலுத்தவுள்ளதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் பியூமி ஆட்டிகல தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ச-6)



## நுழைவுவிசா புதிய நடைமுறை

கொழும்பு, ஓக. 11

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு உடனடி நுழைவுவிசாவை மட்டுமே வழங்குவதற்கு குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தீர்மனித்துள்ளது. இலத்திரனியல் விசாவை பரிசோதிப்பதற்குரிய கருவிகள் இல்லாமையாலேயே உடனடி நுழைவுவிசாவை வழங்குவதற்கு குடிவரவு குடியகல்வு திணைக்களம் தீர்மானித்துள்ளது. (ச-6)

### நாளை

12.08.2024

திங்கட்கிழமை - ஆடி - 27

சுபநேரம் : 12.04 - 01.34

ராகுகாலம் : 07.34 - 09.04


### நாளொரு நல்வார்த்தை

**பலத்தால் மட்டுமே ஒத்துழைக்க முடியும், பலவீனத்தால் மன்றாடவே முடியும்.**

-ட்வைட் டி ஐசனோவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## தம்பிப்பிள்ளை வரதராஜா

**(யாழ். இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் கல்வி நிறுவன அதிபரும், ஒய்வு பெற்ற யாழ். மத்தியகல்லூரி ஆசிரியரும்)**

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப் பிள்ளை வரதராஜா அவர்கள் நேற்று (10.08.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாளை மறுதினம் (13.08.2024) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தோற்றம்** 01.03.1955 **மறைவு** 10.08.2024

**405 பருத்தித்துறை வீதி,**
**இருபாலை**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 970 7673**
**074 362 0451**

(CS/1111) J-1

# மரண அறிவித்தல்



## மார்க்கண்டு பன்னீர்ச்செல்வம்

**(சிற்பாலய கட்டட ஒப்பந்தகாரர்)**

யாழ்ப்பாணம் அராலி மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.மார்க்கண்டு பன்னீர்ச்செல்வம் நேற்று (10.08.2024) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு - தங்கம்மா தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற சின்னத்துரை-கனகம்மா தம்பதியினரின் மூத்த மருமகனும், லலிதராணியின் அன்புக் கணவரும், செல்வராணி, இந்திராணி, சத்தியவடிவேல், ஞானாம்பாள், காண்டீபன் (அமரர்) யோகமலர், கலாதேவி, மதியழகன் ஆகி யோரின் சகோதரரும், காலஞ்சென்ற சண்முகராசா, சிங்கராசா, வனிதராணி, சந்திரகலா, விஜயராணி, செல்வராணி, கமலராணி ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீகாந்,சொரூபகாந்தி,வெங்கடேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அஜிராணி, துசியந், ஜிந்துகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், றஷ்மிகா, றொஷ்வின், வைஷ்ணவி, ஸ்ரீசுபகா, சுபாஜன், கார்மீகன், சாய்மித்ரா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.08.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் சொல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**அராலி தெற்கு,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**பிறப்பு** 31.07.1954 **இறப்பு** 10.08.2024

**0772365595 (ஸ்ரீகாந் - மகன்)**
**0778113949 (வெங்கடேசன் - மகன்)**

(CS 142) A-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ரணில் இல்லாதிருந்தால் பங்களாதேஷ் நிலைதான்

## அமைச்சர் பவித்திரா தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போன்றதொரு தலைமைத்துவத்தை பங்களாதேஷ் இன்று தேடிக்கொண்டிருக்கின்றது. கோத்தாபய நாட்டைவிட்டு வெளியேறிய பிறகு இலங்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவந்த தலைவர் ரணில் விக்கிர மசிங்கவே.

-இவ்வாறு அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

'பெண்கள் எங்கள் பலம்' எனும் தொனிப்பொருளின்கீழ் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

பங்களாதேஷில் என்ன நடக்கின்றது என்பதை தொலைக்காட்சியில் பார்த்தால் நாம் ஏன் இணைந்துள்ளோம் என்பது பற்றி எவரும் விவாதிக்கமாட்டார்கள். பங்களாதேஷ் அரச தலைவரின் வீட்டை போராட்டக்காரர்கள் கைப்பற்றி பைத்தியத்தனமாக விளையாடும் காட்சிகளைப் பார்க்கும்போது இலங்கையிலும் இப்படித்தானே நடந்தது என்று நீங்கள் சிந்தித்திருப்பீர்கள்.

பங்களாதேஷ் பிரதமர் நாட்டைவிட்டு தப்பிச்சென்ற பிறகு அங்கு அழிவுகள் இடம்பெற்றன, போராட்டக்காரர்கள் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றினர், நாடாளுமன்ற உறுப்பினர்களை கொலை செய்தனர், கிடைப்பதற்கெல்லாம் அனுமான் தீ வைத்ததுபோல ஹோட்டல்கள் மற்றும் கட்டடங்களுக்கு தீ வைத்து பங்களாதேஷ் போராட்டக்காரர்கள் பற்றியெரிய வைத்தனர்.

ரணில் விக்கிரமசிங்கபோன்றதொரு தலைமைத்துவத்தை பங்களாதேஷ் இன்று தேடுகின்றது, எமது நாட்டில் ரணில் விக்கிரமசிங்க என்ற தலைவன் உருவாகி இருந்ததாலேயே இங்கு அழிவுகள் ஏற்படவில்லை. கோத்தாபய நாட்டைவிட்டு சென்ற பிறகு, இந்நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை மறந்துவிடக்கூடாது - என்றார். (ஓ-44)




# 9 நாள்களில் 1,050 நோயாளர்கள்

கொழும்பு, ஓக. 11

நாட்டில் கடந்த ஒன்பது நாள்களில் 1,050 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் 148 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 33 ஆயிரத்து 795 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்தில் இதுவரையில் அதிகளவாக 13 ஆயிரத்து 685 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# சூழல் பாதுகாப்புக்கு அமெ. 24.5 மில்லியன்!

இலங்கையின் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக அமெரிக்கா இலங்கைக்கு 24.5 மில்லியன் டொலரை அன்பளிப்புச் செய்துள்ளது. பிளாஸ்ரிக் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கும் மின்சார வாகனங்களுக்கு மின்னேற்றும் நிலையங்களை ஆரம்பிப்பதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும் என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தின் கூட்டணியுடன் இணைய வாருங்கள்

## தமிழ்க் கட்சிகளுக்கு மனோகணேசன் அழைப்பு



**கொழும்பு, ஓக. 11**

**நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளைப் பெறுவதற்காக ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணையுமாறு வடக்கு, கிழக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் அழைப்பு விடுத்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஆரம்பநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது- இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய மகா கூட்டணி உதயமாகியுள்ளது. இலங்கை அடையாளம் கொண்ட தேசிய கூட்டணி இது, அனைத்து இன மக்களும் இலங்கையர்களாக ஒன்றுகூடக்கூடிய மேடை யென்பதாலேயே தமிழ் முற்போக்குக் கூட்டணியும் இணைந்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு வடக்கு, கிழக்கில் வாழக்கூடிய ஈழத் தமிழ் சகோதரர்களை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய என் சகோதரக் கட்சித் தலைவர்களுக்கு ஒரு அழைப்பு விடுக்க விரும்புகின்றேன்.

நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளைப் பெற்று, அங்கிருந்து முன்னோக்கிச் செல்வதற்காக இந்த மகா தேசியக் கூட்டணியில் இணையுமாறு அழைப்பு விடுக்கின்றேன். பொருளாதாரத்தை மீட்பதற்குரிய சிறந்த அணியும் இந்தக் கூட்டணியில்தான் உள்ளது - என்றார். (ஓ-44)

# நீதித்துறை சுயாதீனம் பேணப்படவேண்டும்

## ஆசிய, பசுபிக் சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

நீதித்துறையின் சுயாதீனத்தைப் பேணுமாறு ஆசிய சட்டத்தரணிகள் சங்கமும், ஆசிய பசுபிக் சட்டத்தரணிகள் சங்கமும் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன. கடந்த செவ்வாய்க்கிழமை ஆசிய சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபரின் நியமனம் தொடர்பாக இடைக்கால தடையுத்தரவு பிறப்பிப்பதற்கு உயர்நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது நீதிமன்றத்தின் அதிகாரத்தை குறைக்கும் செயற்பாடு.

பொதுமக்களுக்கு நீதித்துறை மீது நம்பிக்கை ஏற்படும் வகையில் சுயாதீன நீதித்துறை, சட்டம் என்பன உருவாக்கப்படவேண்டும். சுயாதீன நீதிக்கட்டமைப்பும் சட்டமும் சட்டத்துறையை முறையாக நிர்வகிப்பதற்கு மட்டுமன்றி நீதிக்கட்டமைப்பில் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் அவசியம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-6)

# மன்னார்ப் புதைகுழிகள் நீதிமன்றால் கட்டளை

மன்னார், ஓக. 11

மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளின்வெவ்வேறு வழக்குகளில் சில கட்டளைகள் மன்றால் ஆக்கப்பட்டுள்ளன என காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரம் புதைகுழியும், 2018 ஆம் ஆண்டு மன்னார் சதொச புதைகுழி தொடர்பான வழக்குகள் மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன.

இது தொடர்பில் சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்ததாவது,

வழக்கானது கலந்துரையாடல் முறையில் நடைபெற்றது.

பேராசிரியர் ராஜ்சோமதேவவால், ஏற்கனவே இருந்த மனிதப் புதைகுழியை சுற்றி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஸ்கான் பரிசோதனை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஏற்கனவே நீதிமன்றக் கட்டுக்காவலில் காணப்படுகின்ற மாதிரிகளில் எலும்புகள் தனியாகவும், ஏனைய பொருள்கள் தனியாகவும் பிரித்தெடுத்து ஏனைய பொருள்களை பேராசிரியர் ராஜ்சோமதேவவிடம் கையளிக்கவும் இணங்கப்பட்டது.

எலும்புகளை எடுத்து இறப்புகளுக்கான காரணம், பால், வயது போன்ற பிற விடயங்களை அறிவதற்கான அறிக்கைகளை பெறுவதற்காக பிரித்து எடுப்பதற்காகவும் ஒக்ரோபர் 16 திகதியிடப்பட்டுள்ளது.

நிள அளவைத் திணைக்களம், மாவட்டச் செயலகம், தொல்பொருள் திணைக்களம் ஆகியன இந்தப் பிரதேசங்கள் எப்படிக் காணப்பட்டன? இதன் வரலாறு என்ன? யாருடைய கட்டுக்காவலில் இருந்தது என்ற அறிக்கைகளையும் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கட்டளையாக்கப்பட்டது- என்றார். (ஓ-60)

# முருங்கை விலை சரிவு உற்பத்தியாளர் பாதிப்பு

கிளிநொச்சி, ஓக. 11

முருங்கைக்காயின் கொள்வனவு விலை பெரிதும் சரிவடைந்துள்ளதால் தாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக முருங்கை செய்கை உற்பத்தியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு மயில் வாகனபுரத்தில் நூற்றுக்கணக்கானோர் முருங்கை செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட முருங்கைக்காய் தற்போது நூறு ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். குரங்கு, யானை என்பவற்றிடமிருந்து இவற்றைப் பாதுகாத்து அறுவடை செய்ய முயன்றால் அறுவடைக் கூலியைக்கூடப் பெறமுடியாத நிலைமை இருப்பதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். (ஓ-113)

# ஈராக்கில் போராட்டம்

பக்தாத், ஓக. 11

ஈராக்கில் பெண்களுக்கான திருமண வயதை ஒன்பதாகக் குறைத்து சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அதற்கு எதிராக பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டங்களில் ஈடுபட்டுள்ள பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகின்றது. (ம)




**யாழ் வணிகர் கழகம் - (பதிவு இல GA 2601)**

2024 ஆம் வருடத்திற்கான கம்பனிச்சட்டத்தில் பதிவு செய்யப்பட்ட யாழ் வணிகர் கழகத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் 14.09.2024 அன்று நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே யாழ் வணிகர் கழகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களை தவறாது கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.


திகதி : 14.09.2024 சனிக்கிழமை
நேரம் : காலை 10.00 மணி
இடம் : யாழ் வணிகர் கழகப் பணிமனை
165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

உப. செயலாளர்
யாழ் வணிகர் கழகம்.

(CR/42910) J-1


# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 06 . 1932



மறைவு 08 . 08 . 2024

**முத்து சின்னத்தம்பி (மாணிக்கம்)**

நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து சின்னத்தம்பி (மாணிக்கம்) 08.08.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து இலக்சுமி தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் கணவரும் காலஞ்சென்ற மாணிக்கம் சின்னத்துரை மற்றும் இராமலிங்கம் செல்லம்மாவின் சகோதரனும் குணமணி, விஜயராசா, அமரர் சிவராசா தங்கராசா, ஜெயராசா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் கேதீசன், ஜெகதீசன், கௌதீசன், சதீசன், மதீசன், மயூரி, நிலுக்ஷி, நிரோஜன், தயாபரன், பிரசாத், திவ்யா, அபிநயா, ஓவியா, வக்ஷியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை இன்று காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கொல்லங்கிராய் காந்தாளம் பிட்டி இந்து மயானத்திற்கு காலை 11.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 066 0741

(CR 42912) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

**ஒஸ்ரியா போட்டோ**

வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் கிளைகளில் உடனடி வேலைவாய்ப்புக்கள் தொழில்சார் பயிற்சியுடன்

தொடர்பு:- **077 350 1095**

(CS/55887) J-1

## வேலையாட்கள் தேவை

யாழில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள Visa Construction Office ஒன்றிற்கு ரிக்கற் கணினி பாவனை அனுபவம் உள்ள வேலையாட்கள்

தொடர்பு: **077 604 0373**

(CS 28435) V-1

## வீடு வாடகைக்கு உண்டு

குரும்பசிட்டி கிழக்கில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- **077 334 9181**

(CS/55889) J-1



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை
மாலை : 3.00 - 05.00 மணிவரை

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

கால் வீக்கம், கால் எரிச்சல் நீரிழிவு நோயினால் ஏற்பட்ட நீண்ட நாள் மாறாத புண் மற்றும் அனைத்து வகையான நோய்களுக்கும் தீர்வு



அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**திருமதி வே. மோகனதாஸ்**

இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 071 241 1234, 021 221 1239

வெளிநாட்டவர்களும் அருள்வாக்கு பெற தொடர்பு கொள்ளவும்

+94 712 411 234

(CS/55902) J-1

## விநியோகஸ்தர்கள் தேவை

நாட்டின் பாதுகாப்பான தீப்பெட்டி மற்றும் மெழுகுவர்த்தி சார்ந்த உற்பத்தி, விநியோகித்தல் துறையில் முன்னணியிலுள்ள எமது நிறுவனத்தின்

**யாழ்ப்பாண பிராந்தியத்திற்கு**

வேகமாக நகரும் நுகர்வோர் பொருட்களின் விற்பனை மற்றும் விநியோகித்தலில் முன்னனுபவமும், அர்ப்பணிப்பும் கொண்ட விநியோகஸ்தர்கள் தேவை.

ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்பவராயின் பின்வரும் இலக்கத்திற்கு தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை அறிந்துக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: கிங்ஸ்லி
பிராந்திய விற்பனை முகாமையாளர்

**077 010 2417**

## வைத்தியர் சேவை

அரசாங்க வைத்தியசாலைகளில் வைத்தியராக சேவை புரிந்து ஓய்வு பெற்ற வைத்தியர் யாழ்ப்பாண நகருக்குள் தனியார் வைத்தியசாலைகளில் சேவை புரிய எதிர்பார்க்கின்றார்.

தொடர்பு இலக்கம்:

**077 587 5923**

(CS/55876) J-1

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம் சங்கானை ஆண்டு 10 ல் இருந்து A/L வரை வகுப்புக்கள். சிறு குழுக்களாகத் தனித்தனி கவனம். சிறந்த அனுபவம் மிக்க ஆசிரியர் குழாம். குபேரன் கட்டடமாடி சங்கானை

தொடர்பு: **077 675 1649**

## மணமகள் தேவை

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் 58 வயதுடைய இரண்டு பிள்ளைகளுடன் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு செவ்வாய் குற்றம் இல்லாத அழகான, படித்த, அன்பான இந்து யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மணமகள் ஒருவரை 45-52 வயதுக்குள் தேடுகிறார். (வெளிநாடு செல்ல விரும்புபவர்கள் மட்டும்) பொறுப்புக்கள் அற்ற விவாகரத்து பெற்றவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**077 276 4647**

(CR/42904) J-1



தம்பதியர் என்ற நிலையில் இருந்து பெற்றோராக உயருங்கள்!

## ரோயல் மருத்துவமனை நடத்தும் இலவச செயன்முறைக் கருத்தரிப்பு ஆலோசனை முகாம்

| AUGUST 24 | AUGUST 25 |
|---|---|
| வவுனியா | யாழ்ப்பாணம் |

உலகப் புகழ்பெற்ற செயன்முறைக் கருத்தரிப்பு சிகிச்சை நிபுணரான பிரசாந்த் மருத்துவமனையின் தலைமை மருத்துவரை உங்கள் மண்ணிலேயே சந்தித்து, உங்கள் கவலைக்குத் தீர்வு காண அரியதோர் வாய்ப்பு!

**தாய்மை இனியும் கனவல்ல!**



**பிரசாந்த்** மருத்துவமனை தகவல் மையம்

ரோயல் மருத்துவமனை, 62, W.A. சில்வா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு - 06.

அழையுங்கள்: 0754000012, 0777215588

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## ஞானாமிர்தம் திருநாவுக்கரசு

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஞானாமிர்தம் திருநாவுக்கரசு அவர்கள் கடந்த (08.08.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் மகளும், மாரீசன் கூடலைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு அவர்களின் மனைவியும், கொங்கேஸ்வரி (ஓய்வுநிலைப் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் -சங்கானை பிரதேச செயலகம்), லிங்கேஸ்வரி (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தராசா (ஆயுள்வேத வைத்தியர்), நாகேஸ்வரதாஸ் (பிரான்ஸ்), சிவானந்தராஜா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜேந்திரன் (விளையாட்டு உத்தியோகத்தர் மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்), பாலசுவர்ணா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - சங்கானை), செந்தூரன் உமா (பிரான்ஸ்), துவாரகன் (Regional Medical Delegate), கஜிதா (Nature Pharmacy), அர்ச்சுனன் - பிரதீபா (France), ஜனார்த்தனன் - மிதிலா (France), Cedric - கிஷாலினி (France), கஜானனன் - பறீ (Bri-France), தனுசன் - Else (Norway), தனுஷா - Murtin (Norway) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றோஷன், அபிஷன், லக்ஷன், ருத்விகன், அஸ்வின், பிரவீன், ஸ்ரேஜா, கில்யான், கேஷனா, ஆரிணி, ஹறினி, Seylan, Arif, Liam ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 771 6133
070 473 7729

(CS/55911) J-1

# மரண அறிவித்தல்



## திருமதி மாணிக்கம் பூபாலசிங்கி

(ஓய்வுநிலை ஆசிரியர்)

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மாணிக்கம் பூபாலசிங்கி கடந்த (07.08.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - செங்கமலம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பூபாலசிங்கி அவர்களின் அன்பு மனைவியும், யோகசிங்கி (கொலண்ட்), வனசிங்கி (லண்டன்), சுதேஸ்னா, சுலோஸ்னா ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மலிங்கம், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, சரவணமுத்து, கணபதிப்பிள்ளை, செல்லப்பா, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானேஸ்வரதாஸ், ஜெயச்சந்திரன், றஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், சயந்தா, குருபரன் சபாந்தினி, சுரேஸ் சஜீனா, சஜீவன், திவ்வியா, சங்கீதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் சரசாலை கொம்பிகுளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 800 9830

தெய்வங்கேணி வீதி,
சரசாலை தெற்கு, சரசாலை.

(CR/42902) J-1

# 14ம் ஆண்டின் நினைவும், அஞ்சலியும்



"SVM" என்றால் அது
வர்த்தக உலகின் வைரவரிகள் என
வளர்த்தெடுத்த பெரியீர்!
தமிழினம் பெருமையுற
காரைநகர் "எம்மவர் இவர் "என கர்வமுற
யாழ்ப்பாணத்தின் "வர்த்தக சாம்ராட்"
அறம் வளர்த்த நாயகர், ஆன்மீக சிரோன்மணி என
அடுக்கடுக்காகி வரும் புகழுக்குரியீர், நீங்கள்
விண்ணேகிப் பதினான்காண்டுகள்
விரைவாகிப் போனாலும், எம்மை
வழிப்படுத்தி, நெறிப்படுத்திய உங்கள்
ஆற்றலும் அன்பும் இனிய நினைவுகளும் எம்முள்ளத்தில்
என்றும் நீங்காமல் நிறைந்தும் நிலைத்தும் நிற்கும்!
இதயபூர்வமான எம் அஞ்சலிகளும் உங்கள்
இணையடிகளில் ஏந்தலே...!



(CS 55913) V-1

குடும்பத்தினர்

S.V. Murugesu
No. 154, Hospital Road, Jaffna.

S.V. Murugesu (Pvt) Ltd
No.106, Hospital Road, Jaffna.

S.V.M. Agencies (Pvt) Ltd
No.154, Hospital Road, Jaffna.

S.V.M Distributors (Pvt) Ltd
No. 160, Standly Road, Jaffna

SVM. Stores (Pvt) Ltd
No. 162, [illegible] Jaffna

S.V.M. Pvt (Ltd)
No. 122, Dam Street, Colombo 12

S.V.M. Enterprices (Pvt) Ltd
No. 289, A.9 Road, Karadipokku, Kilinochchi

SVM. Fuel Mart
No. 173 Palaly Road, Thirunelvely, Jaffna

S.V.M Rice Mill
Power House Road, Chunnakam.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பயன்பாடற்ற நிலையில் முல்லை பஸ் நிலையம்

முல்லைத்தீவு பேருந்து நிலைய கட்டடத்தை பயன்பாட்டுக்கு மாற்றுமாறு முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். இந்தப் பேருந்து நிலைய கட்டடத்தைத் தனியார் பேருந்துகளோ, அரச பேருந்துகளோ பயன் படுத்தாமையால் அது கால்நடைகளின் உறைவிடமாக மாறியுள்ளது.

இந்தக் கட்டடத்தை பாவனைக்குட்படுத்து மாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைபற்று பிரதேசசபை ஆகியவற் றின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட போதும் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

எனவே பேருந்து நிலையக் கட்டடத்தை பயன் படுத்த உரிய அதிகா ரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (ரி–13)

**மாடி வீடுகள் வாடகைக்கு**

இல 179 மானிப்பாய் வீதியில் இரண்டு கடைகளுக்கு மேல் அமைந்த முதலாம்-இரண்டாம் தளத்தில் உள்ள இரு வீடுகள் வாடகைக்கு கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு:
**021 222 4453**

**வீடு விற்பனைக்கு**

மல்லாகம் சோடா கம்பனி ஒழுங்கையில்
**6 பரப்புக் காணியுடன்**
**வீடு விற்பனைக்கு உண்டு.**
தரகர் வேண்டாம்
(CR.42985) J-1
**077 613 2263**

**கொழும்பு 05 இல்**

அடுக்குமாடி குடியுருப்புக்கள் விற்பனைக்கு

ஒரு முக்கிய இடத்தில் முதலீடு செய்யுங்கள்!

லங்கா வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ளது.

ஆரம்ப தொகை 24 மில்லியனிலிருந்து !




தொடர்புகளுக்கு | +94 77 188 9999
+94 77 257 1588

**வேலையாள் தேவை**

கொழும்பில் உள்ள சில்லறைக் கடைக்கு அனுபவமுள்ள **ஆண் வேலையாள் தேவை.** சம்பளம், சாப்பாடு, தங்குமிடவசதி செய்து தரப்படும்.
(CR.42907) J-1
**075 215 8990**

**வீடு விற்பனைக்கு**

தெகிவளையில் 14.5 பேர்ச் காணியில்
4 அறைகள் உள்ள 60 வருட பழைய வீடு
விற்பனைக்கு உண்டு.
1 பேர்ச் - 55 இலட்சம்
(CR.42908) J-1
**071 484 0610**

### வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 13.07.2024 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் பொன்னுத்துரை சுப்பிரமணியம்**

வீட்டுக்கிருத்தியக் கிரியை நாளை (12.08.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம் பெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதமாக கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மல்லாகம் சந்தி,
மல்லாகம்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

**Land For Sale**

Prime land in wellawatha for sale
ideal for apartment 2 minutes
walking to Galle Road
Genuine buyer only no broker
(CR.42906) J-1
**077 537 2455, 077 759 9777**

**மாபிள் பதித்துத் தரப்படும்**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும். 1 சதுர அடி 75 ரூபா. நிலம் இழுத்துப் பதிக்க 100 ரூபா
தொடர்புகளுக்கு:
**077 334 1281**

**லேத் மெஷின் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள
புரோடக்சன் ரக லேக் மெசின்
விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
**077 226 9823**

**வீடு வாடகைக்கு**


சிறுப்பிட்டி ராஜவீதியில் சாதாரண வீடு
பயன்தரும் 500 வாழைகளுடன்
வாடகைக்கு உண்டு.
(CS.55881) J-1
தொடர்பு:- **077 618 0675**

# மரண அறிவித்தல்

## திரு.கந்தையா செல்வராசா

**(புத்தூர் மேற்கு, புத்தூர்)**

**மலர்வு** 15.02.1942 **உதிர்வு** 08.08.2024



யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் சிவன்கோவிலடி புத்தூர் மேற்கை வசிப்பிடமாகவும் சில காலம் தற்காலிகமாக கனடாவில் வசித்த வருமான கந்தையா செல்வராசா அவர்கள் கடந்த 08.08.2024 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - ஆச்சிக்குட்டி தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் பாசமிகு கணவரும், துரைராசா (அமரர்), இராசதுரை (அமரர்), செல்லத்துரை, நவரத்தினம், பாக்கியம் (அமரர்) ஆகியோரின் அன்பு சகோதருரம், புஸ்பரூபன் (இலண்டன்), புஸ்பகாந்தன் (இலண்டன்), புஸ்பநாதன், விலாசினி (இலண்டன்), மேனகா (கனடா), மதிவதனா (ஆசிரியர்), ரேணுகா, பிரதீபா (எழுதுநர்), குகநந்தினி, ரஜீதரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிறேமினி (இலண்டன்), அனுஷா (இலண்டன்), குசலகுமாரி, சர்வேஸ்வரன் (இலண்டன்), சத்தியசீலன் (கனடா), நடனசபை (ஆசிரியர்), தவசீலன், தயாளன், பாலகுமார், கிருஷிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரணன், இராகவி, தேனுஜன், ஷஷ்விகன், தர்மிகன், ஆர்நிகன், ஆர்த்திகன், ஆரணியா, அட்ஷயா, அபிரா, ஏகன், சங்கீதன், பவன்யா, ரதுமிஷா, கோவர்த்தன், ஹவிதன், கிருஷ்னாத், சானுஜன், சாமினா, பவிஷனா, அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மதியம் 12.30 மணியளவில் சிறுப்பிட்டி மேற்கு பத்தகலட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
077 197 1507 (புஸ்பநாதன்)
077 910 3377 (நடனசபை)
076 420 3487 (தவசீலன்)
075 160 1605 (தயாளன்)
074 937 568 (பாலகுமார்)
00447404669535 (புஸ்பரூபன்)
00447393670487 (புஸ்பகாந்தன்)
00447933932814 (விலாசினி)
0014164599097 (மேனகா)
0016475253215 (ரஜீதரன்)

(CS 1112) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் வித்தாக
09 . 02 . 1951



வானவர் சொத்தாக
04 . 08 . 2022

## அமரர் பத்மகுமார் ரஞ்சினி (கமலேஸ்வரி)

திதி: ஆடி வளர்பிறை சஷ்டி





அண்ணா அண்ணா என
என்னை பாசமுடன்
அழைத்து ஆனந்தித்து உறவாடிய
என் அன்புத் தங்கையே
உன் பிரிவை நினைந்து நினைந்து
கண்ணீர் வடிக்கிறேனம்மா!
ஆண்டு ஒன்றென்ன எத்தனை
ஆண்டானாலும் உன்
நினைவுகளோடு வாழும்
உன் அன்பு அண்ணா

உரும்பிராய் வடக்கு.

உமது பிரிவால் வாடும்
**கருணாகரன் (கருணை)**

# மரண அறிவித்தல்

அன்னையின் மடியில்
30 . 07 . 1942



ஆண்டவன் அடியில்
09 . 08 . 2024

## சிவசுப்பிரமணியக்குருக்கள் புஷ்பவதியம்மா

புங்குடுதீவை வசிப்பிடமாகக்கொண்டவரும், புங்குடுதீவு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோவில், குறிகாட்டுவான் மனோன்மணியம்பாள் ஆலயம், கொம்பாபிட்டி வீரகத்தி விநாயகர் ஆலய பரம்பரைக் குருக்களாகிய அமரர் சிவசுப்பிரமணியக் குருக்களின் அன்பு மனைவி சிவசுப்பிரமணியக் குருக்கள் புஷ்பவதியம்மா கடந்த 09.08.2024 அன்று காலமானார்.

அன்னார் சதாசிவக்குருக்கள் - கல்யாணியம்மா தம்பதியரின் மருமகளும், சின்னையாக்குருக்கள் - லெட்சுமியம்மா தம்பதியரின் மகளும், சிவகுமாரக் குருக்கள், சிவகாமசுந்தரி, ரஞ்சனி, சுரேஸ்வரக்குருக்கள், அமரர் சதாசிவசர்மா, ரமேஷ் சர்மா, அமரர் தினேஷ் சர்மா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கீதநந்தினி, சத்தியானந்தசர்மா, சிவராமசர்மா, பாமதி, ரஜனிபாலா, ஹர்சினி ஆகியோரின் மாமியாரும், தர்சினி, தர்சன், ஆனந்தி, ரேவதி, சுவாதீஷ், ஸ்ருதி, சுபஹரி, துஷ்யந்தன், அனுஷ்யந்தன், சுபாசனா, அமரர் பிரகாஷ், அபிஷ்னா, சகானா, தனஞ்செயன் ஆகியோரின் பேர்த்தியும், ஞானவாசினி, ஞானகல்யாண், ஞானகேதீஸ், அபிராமி, ஆர்த்தி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.08.2024) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

15/47, கலைமகள் வீதி, 2ம் ஒழுங்கை,
நல்லூர் வடக்கு, கல்வியங்காடு.

தகவல்:
**குடும்பத்தினர்**



# வெடித்துச் சிதறியது செயற்கைக்கோள்

பீஜிங், ஓக. 11

சீனாவின் மிகப்பெரிய இணைய சேவைக்கான செயற்கைக்கோள் தொகுப்பை ஏவிய ரொக்கெட் வெடித்துச் சிதறியதையடுத்து, விண்வெளியில் 300க்கும் அதிகமான குப்பைகள் உருவாகியுள்ளன என்று அமெரிக்க விண்வெளிக் கண்காணிப்பகம் அறிவித்துள்ளது. (ம)

**பெண்களுக்கான அறைகள் வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ஆடியபாதம் வீதி, கொக்குவில் எனும் விலாசத்தில் பெண்களுக்கான அறைகள் குறைந்த விலைக்கு வாடகைக்கு உண்டு.

077 070 3472

**வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வியாபார நிலையத்திற்கு கணக்காளர் தேவை.
அலுமினிய பிற்றிங் றாக்கை விற்பனைக் குண்டு.

தொடர்பு: 077 711 1025
077 991 1025

**அர்ச்சகர் தேவை**

நகரில் இருக்கும் சிவாலயம் ஒன்றிற்கு பிராமண அர்ச்சகர் தேவை

தொடர்புகளுக்கு:
074 018 0236

'ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹா'

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
02 . 12 . 1985



இறைவன் அடியில்
30 . 07 . 2024

## கணேசலிங்கம் கோபிநாத்

(விற்பனை முகாமையாளர் - டுபாய்)

யாழ்ப்பாணம் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் கோபிநாத் கடந்த (30.07.2024) செவ்வாய்க்கிழமை டுபாயில் காலமானார்.

அன்னார் அமரர் கணேசலிங்கம் மற்றும் சறோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகனும், தர்மகுமார் தேவராணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஷாழினியின் அன்புக் கணவரும், ஹாசினியின் (தரம் - 2 G கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) பாசமிகு தகப்பனாரும், சுஜீவன் (டென்மார்க்), தாரகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் நல்லூர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஆதிரை (டென்மார்க்), லவகாந் (சட்டத்தரணி), அருண்சாந் (பொறியியலாளர் - டுபாய்), லாகினி ஆகியேுாரின் அன்பு மைத்துனரும், அய்ரா (டென்மார்க்) வின் பாசமிகு சித்தப்பாவும், கவினாவின் அன்பு மாமாவும், இமயா, ஆதிரன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், Dr. ஜீவதாஸ், சஜித்திரா (டுபாய்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவலடி லேன்,
திருநெல்வேலி மேற்கு.
தொடர்பு - 0777 903612

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 1118) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரணிலுக்கு எவரும் சவால் கிடையாது

## ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 11

ஐக்கிய மக்கள் கூட்டணியோ, நாமல் ராஜபக்ச அணியோ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவால் கிடையாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், சஜித்துடன் ஏற்கனவே இருந்தவர்களை வைத்தே ஐக்கிய மக்கள் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இது ஊடகத்துக்கான கண்காட்சி.

"மனோ கணேசன், திகாம்பரம் எல்லாம் சஜித்துடன்தான் இருக்கின்றனர், டலஸ் அழகப்பெருமவும் இணைந்தே செயற்பட்டார், அப்படியானால் இது புதிய கூட்டணியா? அந்தக் கூட்டணி எமக்குச் சவால் கிடையாது.

ஜனாதிபதித் தேர்தலில் இளைஞராக நாமல் ராஜபக்ச களமிறங்கியுள்ளார். ஆனால் கட்சியின் கிராம மட்ட ஆதரவாளர்களின் கோரிக்கை என்ன என்பதை அறிந்து அவர் முடிவெடுக்க வேண்டும். மொட்டுக் கட்சி எம்.பி.க்களும் ரணில் பக்கம்தான் உள்ளனர்"- என்றார். (ச-44)

# தமிழ் மக்கள் பொதுச்சபையால் கிளிநொச்சியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஓக. 11

கிளிநொச்சியில் நேற்றுக்காலை 'தமிழ் மக்கள் பொதுச் சபை'யின் மக்கள் சந்திப்பும், பொதுவேட்பாளர் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், 400க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். சந்திப்பின்போது பொதுமக்களால் எழுப்பப் பட்ட கேள்விகளுக்கு பொதுச்சபை உறுப்பினர்களால் பதிலும் வழங்கப்பட்டது. (ம-113-27)

# கப்பலில் பெருவெடிப்பு

பீஜிங், ஓக. 11

உலகின் பரபரப்பான துறைமுகமாகக் கருதப்படும் சீனாவின் நிங்போ துறைமுகத்திற்குச் சென்றுகொண்டிருந்த கொள்கலன் கப்பலில் பெருவெடிப்பு ஏற்பட்டுள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

## பிளந்தது...

செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக ஜனாதிபதி ரணில் களமிறங்கியுள்ளார். ஜனாதிபதி ரணிலையே பெரமுனவும் ஆதரிக்க வேண்டும் என்றும், அவரையே வேட்பாளராக நிறுத்தவேண்டும் எனவும் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களான அமைச்சர்கள் பிரசன்ன ரணதுங்க, அலி சப்ரி, பவித்ரா வன்னியாராச்சி உள்ளிட்ட பலரும் வலியுறுத்தி வந்தனர்.

ஆனால், பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணிலை ஆதரிப்பதில்லை என்று தீர்மானித்துள்ள அதேநேரம், கட்சியின் வேட்பாளராக நாமல் ராஜபக்சவைக் களமிறக்கியுள்ளது. எனினும், ஜனாதிபதி ரணிலை ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தியவர்கள் தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டிலேயே உள்ளனர். அவர்களுக்கு எதிராகக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ள பின்னணியிலேயே, பெரமுனவின் முடிவுக்கு மாறாக, ஜனாதிபதி ரணிலை ஆதரித்தவர்கள் இணைந்து அடுத்தவாரம் புதிய கட்சியை உருவாக்கத் தீர்மானித்துள்ளனர்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று இந்தத் தகவலைப் பகிரங்கப்படுத்தியுள்ளார். கட்சியின் பெயர், சின்னம் உள்ளிட்ட இதர விவரங்கள் அடுத்தவாரம் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## நம்பி...

ஜனாதிபதி ரணிலை ஆதரித்துள்ள உள்ளூராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் மற்றும் கட்சிப் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி ரணிலுக்கும் இடையிலான சந்திப்பு கண்டியில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்காக ஜனாதிபதி ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்தை பாராட்டிய உள்ளூராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியின் வெற்றியை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்று ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர்.

உள்ளூராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் மற்றும் அமைப்புகளின் பரிந்துரைகள் அடங்கிய ஆவணமும் இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்தே, அநுராத ஜயரத்ன, ஜானக வக்கும்புர, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம-44)

## தேர்தல்...

பாடுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதன்படி, ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 269 முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 189 முறைப்பாடுகளும், மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 77 முறைப்பாடுகளும் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் மட்டுமல்லாமல், தேர்தல் வன்முறைகள் தொடர்பிலும் இவ்வாறு முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

## விதிமீறினால்...

எந்தவொரு வேட்பாளரும் தேர்தல் சட்டங்களை மீறினால், ஜனாதிபதித் தேர்தலின் பின்னரும் அவர்களின் பதவிகளை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியும் - என்றார். (அ-ச-இ)

## தடை...

சாதாரண பொது மக்களின் வாகனங்களைத் திருப்பி அனுப்புகின்ற பொலிஸார், பிக்குகளின் வாகனத்தை உள்நுழைய அனுமதித்தமை எவ்வாறு என்று திருவிழாவுக்காகச் சென்றிருந்த மக்கள் கடும் விசனத்தை வெளியிட்டனர். (அ-ம-20)

## ஜனாதிபதித்...

20க்கும் மேற்பட்டோர் இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தியுள்ள நிலையில் அவர்களில் இரண்டு தமிழர்களும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அருணலு மக்கள் முன்னணியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு மருத்துவர் கே.ஆர்.கிரிஷான் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார். அதே போல நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.திலகராஜா சுயாதீன வேட்பாளராகக் களமிறங்குவதற்கு கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

அத்துடன், தமிழ்ப் பொதுவேட்பாளராக களமிறங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ள பா.அரியநேந்திரனுக்குரிய கட்டுப்பணமும் விரைவில் செலுத்தப்படவுள்ளது. கட்டுப்பணம் செலுத்துவதற்குரிய கால எல்லை ஓகஸ்ட் 14ஆம் திகதி நண்பகலுடன் நிறைவுபெறுகின்றது. வேட்பு மனுத் தாக்கல் ஓகஸ்ட் 15ஆம் திகதி இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## சிவகங்கை...

பெற்றது. இதன்படி சிவகங்கை பயணிகள் கப்பலானது வெள்ளோட்டத்துக்காக நேற்றையதினம் நண்பகல் 12 மணியளவில் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்தது. (அ-ம-27)

விசா உதவிகள்

Student visa, Visit visa, settlement visa படிவங்கள் நிரப்புதல். on line இல் விண்ணப்பிக்க உதவுதல். ரூபா 30,000 மட்டும்.

Visa Hub Consultants
554 A/3 Galle Road,
Colombo - 06. வெள்ளவத்தை
நேரில் வரத் தேவையில்லை

(CR 42914) V-1

ஸ்டெல்லா: 077 769 0413

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில்
112 பரப்புக் காணியில் 14 பரப்பு
காணி மட்டுமே விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் (2 வது காணி).
- 20 அடிப்பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- ஒரு பரப்பின் விலை 5 1/2 இலட்சம் (550000/=)
- தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்:
காலை 6 மணி தொடக்கம் மாலை
6 மணி வரை.

(CS 1107) J-1

தொடர்புகளுக்கு:
ஜெயம் 077 814 7389
077 986 5457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

Audi Q2 (2018) ஆம் ஆண்டு கார் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:

**076 693 2227**

(CS/55903) J-1

# தேர்தல் முன்னேற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் ஆராய்வு



யாழ்ப்பாணம், ஓக. 11

ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் தொடர்பில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனுக்கும், யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜே. ஏ. ஹாலிங்க ஜெயசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வியாழக்கிழமை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

சந்திப்பில் தேர்தல் தொடர்பான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதன்போது யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ், காங்கேசன்துறைச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜி. சந்தன ஹமகொட மற்றும் யாழ்ப்பாண உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரும் உடனிருந்தனர்.

(ச-66-9)

**கோழி முட்டை மலிவு விலையில்**

1 Kg இறைச்சி - 1000/=
முட்டை - 35/=

**நியூ சிற்றி கோழிக் கடை**
**கோழி பாம்**
குருநகர் மார்க்கட் முன்பாக
யாழ்ப்பாணம்.

**மணமகள் தேவை**

யாழ். இந்து (V) கௌரவ குடும்பம், 1982, ரேவதி நட்சத்திரம், விவாகரத்துபெற்ற அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு:- 077 325 8942

(CR/43097)

**பணியாளர் தேவை**

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அழகு சாதனப் பொருட்கள், ஆலய பொருட்கள், சிலைகள் என்பனவற்றை விற்பனை செய்வதற்கு புதிய காட்சி அறைக்கு அனுபவமுள்ள

- வரவேற்பாளர்
- விற்பனை உதவியாளர்
- காசாளர் தேவை.

- வெளி மாவட்டத்தவர்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு :

076 034 9926, 077 604 0373

(CS/28434) J-1

**காணி விற்பனைக்கு**

எழுதுமட்டுவாழ் வடக்கு,
மருதங்குளம் விழுபளை வீதியில்
வடக்கு நோக்கி 1 கி.மீ தூரம்
நிலப்பரப்பு - 66
தென்னை, தோட்டப்
பயிர்செய்கைக்கு உகந்த நிலம்.
தரகர் தேவை இல்லை.

077 691 4151, 021 227 0948

(CS/55883) J-1

**மணமகள் தேவை**

1993, (K) இந்து, அனுஷம்,
Electrical Engineer,
7ல் செவ்வாய்.
➤ Working Place - Colombo
➤ Address - Chunnakam, Jaffna.

076 064 8959, 071 876 7699

(CS/1092) J-1

**வீடு வாடகைக்கு**

கொக்குவில் பிரம்படி லேனில்
வீடு வாடகைக்கு உண்டு.
வைத்தியர்கள். பொறியியலாளர்கள்.
விரிவுரையாளர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:-

076 448 8027

(CS/55905) J-1

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை
சுவாமியார் வீதியில்
அந்தோனியார் கோவிலில் இருந்து
350m தூரத்தில்
3 பரப்புக் காணியுடனான
வீடு விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்பு கொள்ளவேண்டாம்)

தொடர்பு:- 077 614 6434

(CS/55901) J-1

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி
ஈச்சமோட்டையில்
2 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 614 6434

(CS/55960) J-1

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

அங்கர் பாதுகாப்பு சேவை நிறுவனம்.
இடம் - யாழ்ப்பாணம்

077 539 6350
077 417 0686

(CS/55906) J-1

**காணி விற்பனைக்கு**

கைதடி - நவபுரம் வீதி முகப்புடன் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ஆவணங்கள் அனைத்தும் சட்டரீதியாக 100% சரியாக உள்ளன.

➤ நன்னீர் வசதி உண்டு.
➤ சிறந்த சுற்றுச் சூழல்.
➤ 1 பரப்பு - 8 லட்சம் ரூபா.

விலை நேரில் பேசித்தீர்மானிக்கலாம்
மேலதிக விபரங்களுக்கு :-

076 659 0583, 077 612 2971

(CS 55898) J-1

**விசா ஆலோசனை சேவை**

➤ எதிர்வரும் 22ம் திகதி பிரான்ஸிலிருந்து பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் வருகை தருவதனால் யாழில் வைத்து Spot Addmission வழங்கப்படும்.
➤ சகல நாடுகளுக்குமான Visit Visa, Work Visa, Student Visa, Family Visa, Imigration Visa எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும். France, Italy Visit Visa 2 கிழமைகளில் பெற்றுக் கொள்ள முடியும்.
➤ ஜேர்மனி, UK வேர்க் போமிட் 6 கிழமைகளில் பயணம்.
➤ சகல தூதுவராலயங்களுக்குரிய ஆவணங்களும் சரி செய்து தரப்படும்.

தொடர்பு:- 077 604 0373
London 44 740 508 6762

(CS/28433) J-1

**கடைகள் வாடகைக்கு**

பருத்தித்துறை வீதியில்
சட்டநாதர் கோவில் முன்பாக
கடைத் தொகுதிகள்
வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-

075 045 3385, 021 222 9229

(CS/55897) J-1

**காணி விற்பனைக்கு**

- கொழும்புத்துறை விதானையார் வீதியில்
- 2 1/2 பரப்புக் காணி 4 பக்கமும் சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு.
- 1 1/4 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும்
- சிறந்த சுற்றுச் சூழல்
- நல்ல நீர் ஊற்று
- A9 வீதி 7 நிமிடம்
- கச்சேரி 10 நிமிடம்
- சுண்டுக்குழி, சென் ஜோன்ஸ் பாடசாலைகள் 7 நிமிடம்

தரகர் தேவையில்லை.
காணி உரிமையாளர்

076 659 0583, 077 612 2971

- யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதியில் காப்பற் வீதி முகப்பு 200 அடியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- எந்தவொரு வியாபார நோக்கத்திற்கும் சிறந்த காணி.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

காணி உரிமையாளர்

076 659 0583, 070 575 8086

**நீர்க்கசிவை தடுப்பதற்கு**

உங்கள் கட்டடங்களில் மழைக்காலங்களில் ஏற்படும் நீர்க்கசிவை.
10 வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகின்றோம்.
Finex ஸ்தாபனத்தாரின் ஏகவிநியோகஸ்தர்களிடம் இருந்தும் உலகத்தரமிக்க இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

வடமாகாணத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தியவர்கள்
15 வருட அனுபவமுள்ளவர்கள்

தற்போது கொழும்பில் தெஹிவளையிலும்

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

**காணி விற்பனை**

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்திற்கு அருகாமையிலும், மாவிட்டபுரம் புகையிரத நிலையத்திலிருந்து 1 Km தூரத்திலும், மயிலிட்டி பிரதேச சபை அலுவலகத்திலிருந்து 200M தூரத்திலும், கட்டடங்கள், களஞ்சிய அறைத் தொகுதிகள், பண்ணைகள் மற்றும் விவசாயம் செய்யக்கூடிய 76 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : சுபாஸ் கார்த்திகேசு

075 458 0835, 070 458 0835

(CR/42903) J-1

**காணி விற்பனைக்கு உண்டு**

768 யாழ் கீரிமலை வீதியில்
அம்பத்தனை அழகோலை
பிள்ளையார் கோயில் சமீபமாக
உள்ள கம்மாலைக்கு பின் காணி
4 பரப்பு 12 குழி கிணற்றுப்
பங்குடன் விற்பனைக்கு உண்டு.

076 639 9443

(CS/1106) J-1

**கட்டடம் வாடகைக்கு**

(முதலாம் மாடி)

பலாலி வீதி, உரும்பிராய்ச் சந்தியில்
அமைந்துள்ள 2000 சதுரஅடி
விஸ்தீரணமுடைய மாபிள் தரையும்,
முன்பகுதி கண்ணாடியால்
அமைக்கப்பட்ட சுவருமுடைய
அலுவலகம், Supermarket, Restaurant
அமைப்பதற்கு உகந்த கட்டடம்
வாடகைக்கு உண்டு.

077 757 0280

(CS/55907) J-1

**வெற்றுக்காணி விற்பனைக்கு**

யாழ். நல்லூர் குறோஸ் றோட்டில் நல்ல
தண்ணீர் கிணற்றுடன் கூடிய
6 3/4 பரப்பு வெற்றுக்காணி
விற்பனைக்கு உண்டு.
2 1/4 பரப்பு துண்டுகளாக பிரித்தும்
வாங்கலாம்.
காணியை பார்வையிட்ட பின்பு
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு :

077 607 8888



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

நிழல் பிரிவதில்லை தன் உடலை விட்டு
அது அழிவதில்லை கால் அடிகள் பட்டு
நீ நடமாடும் பாதையில் கவனம் வைத்தால்
இங்கு நடப்பது நலமாய் நடந்து விடும்.

- வாலி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2055 ஆடி 26 ஞாயிற்றுக்கிழமை (11.08.2024) சிகரம் : 214

# மருத்துவர் அர்ச்சுனா முன்வைத்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஆதாரமற்றவையே!



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளராக கடந்த 2015 முதல் இயங்கி வருபவர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி. யாழ். போதனா மருத்துவமனை போருக்குப் பின்னர் மீண்டெழுந்து, பௌதிகரீதியாகவும், சேவை மூலமும் மிகச் சிறப்பான நிலையை அடைய அயராது உழைத்துவருபவர் மருத்துவர் சத்தியமூர்த்தி. அண்மைக்காலமாக மருத்துவத் துறை மீதும், போதனா மருத்துவமனை மீதும் முன்வைக்கப்படும் பல்வேறு விமர்சனங்கள் தொடர்பில், யாழ்.போதனா மருத்துவமனையின் எதிர்கால முன்னேற்றங்கள் தொடர்பிலும் 'உதயன்– சஞ்சீவி' வாசகர்களுக்காக வழங்கிய நேர்காணல் இது.

○ நேர்கண்டவர்கள்: மயூரன், சுலக்சன்

## நான் ஒருபோதும் அரசியலுக்கு வரமாட்டேன்!

**கே: வடக்கில் எங்கு மருத்துவத்துறைசார்ந்த பிரச்சினைகள் எழுந்தாலும், ஒரு கட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அந்தப் பிரச்சினைகளுக்குள் இழுக்கப்பட்டு விமர்சிக்கப்படுகின்றதே. நீங்கள் அதை எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

ப: திட்டமிட்ட வகையில் பணிப்பாளருக்கும், மருத்துவர்களுக்கும் எதிராக, பிரசாரம் செய்யப்படுகின்றது. இந்த மருத்துவமனையில் 120 மருத்துவ நிபுணர்கள், 325 மருத்துவர்கள், 125 பயிற்சி மருத்துவர்கள் என்று 550க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் உள்ளனர்.

வடபகுதியில் உள்ள மிக முக்கியமான கற்பித்தல் மருத்துவமனை. இந்த மருத்துவமனையின் சேவைகளை, பணியாற்றும் மருத்துவர்களைத் தாக்குகின்ற செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ளவேண்டும். இந்த மருத்துவமனையின் வட பகுதியின் ஒரு இதயம். மருத்துவமனையின் அனைத்துப் பிரிவுகளும் தடைப்படாது இயங்கிக் கொண்டிருக்கவேண்டும். அதற்குமருத்துவர்களின் செயற்பாடு இன்றியமையாதது.

மருத்துவர்கள் ஒவ்வொருவரும் மனச் சோர்வின்றிப் பணிக்கு வரவேண்டும். அவர்கள் 24 மணிநேரக் கடமையில் நிறைய சந்தர்ப்பங்களில் அவர்கள் பணியாற்ற வேண்டியிருக்கின்றது. இவ்வாறு இருக்கையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையால் வழங்கப்படும் சேவைகளைக் கருத்தில் கொள்ளாது, மருத்துவமனைக்கும், மருத்துவர்களுக்கும் எதிராக ஏன் பிரசாரம் செய்யப்படுகின்றது என்பது புரியவில்லை.

இலங்கை அரசியலில் அண்மைக்காலங்களில் நடக்கும் சம்பவங்களின் பின்னணியாக இருக்கலாம். நாட்டில் தேர்தல்கள் நடக்கவுள்ள நிலையில் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளால் அவ்வாறு நடக்கலாம். என்னவாக இருந்தாலும் வட பகுதியின் முக்கியமான மருத்துவனையின் சேவைகளைத் தாக்குகின்ற போது அல்லது பொய் பிரசாரங்களை மேற்கொள்ளும்போது மருத்துவ சேவைகளில் பெரும் பின்னடைவு ஏற்படும்.

அண்மைய நாள்களில் நடந்த சம்பவங்களால் மருத்துவர்கள் சிலர் இங்கிருந்து வெளியேறுவதுதான் சரி என்ற எண்ணப்பாட்டுக்கு வந்திருக்கின்றனர். இது ஒரு தீவிரமான விடயம். இந்த விடயத்தில் ஊடகங்கள் சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். ஊடகங்கள் மருத்துவ சேவைக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும்.

**கே: யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தொடர்பாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படும் குறைபாடுகள், சிகிச்சை வழங்கல் தொடர்பான குற்றச்சாட்டுகள் என்பவற்றுக்கு நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்ற கருத்து பொதுமக்கள் மத்தியில் உள்ளதே?**

ப: பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படும் விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. சிலவற்றுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கமுடியும், சிலவற்றுக்கு அவற்றுக்குரிய தொடர் செயற்பாடுகள் ஊடாகவே நடவடிக்கை எடுக்கமுடியும்.

அண்மையில்கூட பொதுமகன் ஒருவர் ஆதாரங்களுடன் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய இருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். முறைப்பாடு வழங்கியவருக்கு, அவரது முறைபாடு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையைத் தெரியப்படுத்தியிருக்கிறோம்.

ஆனால் பொதுவெளியில் அது தொடர்பான விவரங்களையோ, அவர்களின் விவரங்களையோ, பெயர்களையோ நாங்கள் கொள்கை அடிப்படையில் வெளியிடுவதில்லை. அவ்வாறு தகவல்களை வெளியிடுவது அவர்களின் தனிப்பட்ட வாழ்வில் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். பொது நோக்குடன் நாம் இந்த நடைமுறையைப் பின்பற்றுகின்றோம். கொரோனாத் தொற்றுக் காலத்தில்கூட கொரோனாத் தொற்றாளர்களின் தனிப்பட்ட விவரங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

ஊடகங்கள் எம்மிடம் தொடர்புகொண்டு கேட்கும்போது நாம் அவர்களுக்கு இந்த விவரங்களைத் தெளிவுபடுத்தமுடியும். முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளிக்கமுடியும்.

பொதுமக்கள் தங்கள் முறைப்பாடுகளை ஆதாரங்களுடன் உரியமுறையில் கையளித்தால் மட்டுமே எம்மால் நடவடிக்கை எடுக்கமுடியும்.

எவ்விதமான ஆதாரமும் இன்றி சமூக வலைத்தளங்களில் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும்போது, அதை அடிப்படையாகக் கொண்டு எம்மால் எவ்விதமான விசாரணைகளையும் முன்னெடுக்கமுடியாது என்பதைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளவேண்டும். மின்னஞ்சல் மூலமாக, தொலைபேசி ஊடாக, வட்ஸ் அப் ஊடாக, மருத்துவமனையில் உள்ள முறைப்பாட்டுப் பெட்டியில் முறைப்பாடுகளைத் தெரிவிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆதாரங்களுடன் கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நோயாளி ஒருவரிடம் இருந்து சிகிச்சைக்காகப் பணம் பெற்றுக் கொண்ட மருத்துவர் ஒருவர் தொடர்பாக பொதுமகன் ஒருவர் ஆதாரங்களுடன் வழங்கிய முறைப்பாட்டுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த மருத்துவர் இங்கிருந்து இடமாற்றப்பட்டுள்ளார்.

**கே: 2015 ஆம் ஆண்டு, யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் பதவிக்கு வந்த மருத்துவர் சத்தியமூர்த்தி, நோயாளர் நலனைச் சிந்திப்பவராக இருந்தார். ஆனால் தற்போதுள்ள மருத்துவர் சத்தியமூர்த்தி அவ்வாறு இல்லை என்றும் முன்வைக்கப்படும் விமர்சனத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

ப: 2015 ஆம் ஆண்டு வந்தவுடன் சில வெளிப்புற மாற்றங்கள் செய்து கொடுக்கப்பட்டன. நோயாளர்களைப் பார்வையிட வருவோர் நிற்பதற்கு 'செட் 'அமைத்துக் கொடுத்தமை அவர்களுக்குப் பெரிய விடயமாக இருந்தது. திடீரென மேற்கொள்ளப்பட்ட அந்த மாற்றங்கள் மக்களால் பேசப்பட்டன.

ஆனால், இப்போது நாங்கள் அடுத்த கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றோம். இப்போது மருத்துவமனைக்குள் மருத்துவ வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளிலேயே நாங்கள் கவனம் செலுத்துகின்றோம். அனைத்து வசதிகளும் கொண்ட மருத்துவமனையாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையை மாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடனேயே நான் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றேன். இந்த விடயங்கள் மக்களுடன் நேரடித் தொடர்பைக் கொண்டிருப்பதில்லை. அதனால் அவர்களுக்கு இவ்வாறான ஒரு தோற்றப்பாடு ஏற்பட்டிருக்கலாம்.

அண்மையில் என்பு மச்சை மாற்றுச் சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருப்பது ஒரு பெரிய விடயம். அதைப்போன்ற பல விடயங்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவை தொடர்பாக மக்களுக்குத் தெரிவதில்லை.

இந்த மாற்றங்களைத் தனி ஒருவரால் மேற்கொள்ளமுடியாது. ஒரு அணியாகவே செய்யமுடியும். அவ்வாறே பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம். நான் 2015 ஆம் ஆண்டு செய்ததை விடவும் இப்போது கடுமையாகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றேன். மருத்துவமனையில் உள்ள 2 ஆயிரத்து 500 பணியாளர்களின் ஒத்துழைப்புடனேயே மருத்துவமனையை முன்னேற்றகரமான மாற்றங்களைச் செய்து கொண்டிருக்கின்றோம். இவை அனைத்தும் மக்கள் நலனைச் சிந்தித்தே முன்னெடுக்கப்படுகின்றன.

**கே: பொதுமக்களால் பரவலாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு, அரச மருத்துவமனைக் கடமை நேரங்களில் மருத்துவர்கள் தனியார் மருத்துவமனைகளில் பணிக்குச் செல்வதுதான். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இந்த நிலைமை எப்படி?**

ப: யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கட்டுப்பாடுகள் கடுமையான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எந்தவொரு மருத்துவரும், தாதியரும் கடமை நேரத்தில் கடமை ஸ்தானத்தில் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் உதாரணமாக ஒருவர் கடமை நேரத்தில் தனியார் மருத்துவமனையில் இருப்பது எமக்கு ஆதாரத்துடன் அறிவிக்கப்பட்டால் அது தொடர்பான கடுமையான நடவடிக்கை சுகாதார அமைச்சின்

02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
11 ஒகஸ்ட் 2024

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



# யாழ்.போதனாவை தேசிய மருத்துவமனையாக உயர்த்துவதே என் இலக்கு!!

ஊடாக நிச்சயம் மேற்கொள்ளப்படும்.
எந்தவொரு மருத்துவரும், தாதியரும் கடமை நேரத்தில் கடமை ஸ்தானத்தில் இல்லாவிட்டால் அவ்வாறான தகவல்களைப் பொதுமக்கள் எமக்கு வழங்கமுடியும். கடமைநேரத்தில் யாராவது தனியார் மருத்துவமனையில் இருந்தால் சுகாதார அமைச்சின் ஊடாக நாங்கள் கடுமையான நடவடிக்கை எடுப்போம்.
ஒரு சிலர் எமக்குத் தெரியாமல் எங்களுக்குத் தகவல் கிடைக்காத விதத்தில் நடந்துகொள்கின்றனர். யாரேனும் கடமை நேரத்தில் இல்லாதிருந்தால் அவ்வாறான தகவல்கள் எதுவும் இருந்தால் பொதுமக்கள் எமக்கு ஆதாரங்களுடன் தந்தால் நாம் நடவடிக்கை எடுப்போம்.

**கே: அண்மைக்காலங்களில் அரச மருத்துவமனைகள் நோக்கி அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றின் பின்புலத்தில் தனியார் மருத்துவத்துறை இருக்கலாம் என்று கருதுகிறீர்களா?**

ப: அரச மருத்துவமனைகள் மீது திட்டமிட்டவகையில் பொதுமக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் செயற்படுபவர்கள் வெளிப்படுத்தப்படவேண்டும். அதற்குக் துணைபோகும் சில ஊடகங்களும் இருக்கின்றன. சில அரச மருத்துவமனைகளின் சேவைகள் தொடர்பாக அவதூறு பரப்பும் வகையில் செயற்பட்டு, தனியார் மருத்துவமனைகளை வளர்க்கும் விதத்தில் நடந்துகொள்ளக்கூடாது. அது கட்டாயம் தவிர்க்கப்படவேண்டும்.
இந்தவிடயத்தில் ஊடகங்களுக்கு ஒரு சமூகப் பொறுப்பு இருக்கின்றது. தகவல்களை வெளிப்படுத்தும்போது அதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வது அவசியமாகும். மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் ஆதாரமற்ற தகவல்களை வெளிப்படுத்தக்கூடாது. செய்தி என்பதற்கு அப்பால் மக்களின் உணர்வுகளைத் தூண்டி அவர்கள் மத்தியில் பதற்றம், பயத்தை ஏற்படுத்தும்போது, அரச மருத்துவமனைகளை நம்பியிருக்கும் பொருளாதாரரீதியில் பலமற்ற மக்கள் சிகிச்சையைத் தவிர்த்துக்கொள்ளவே முயல்வார்கள். இது ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.
அரச மருத்துவமனைகள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்தி, அவர்கள் மத்தியில் இலவச சிகிச்சை தொடர்பான அவநம்பிக்கையை ஏற்படுத்துவது மறைமுகமாக தனியார் மருத்துவமனைகளை நோக்கி மக்களை திசைதிருப்பும் ஊக்குவிக்கும் செயற்பாடாக இருக்கலாம் என்ற சந்தேகம் எமக்கும் இருக்கின்றது.

**கே: யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பணியாற்ற வந்த மருத்துவ நிபுணர்கள் சிலரை மருத்துவ நிபுணர் ஜெயக்குமார், மருத்துவ நிபுணர் உமாபதி, மருத்துவர் காண்டீபன் போன்றவர்கள் திட்டமிட்டு வெளியேற்றப்பட்டனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையானவையா?**

ப: நான் இங்கு பதவியேற்றபோது 49 மருத்துவ நிபுணர்கள் இருந்தார்கள். தற்போது 120 மருத்துவ நிபுணர்கள் உள்ளனர். இங்கே நீங்கள் குறிப்பிட்ட மருத்துவர்கள் தங்கள் சொந்தக் காரணத்துக்காகவே இங்கிருந்து சென்றுள்ளனர். அதற்குரிய ஆவணங்களை அனைத்தும் எம்மிடம் இருக்கின்றன. இங்கு பணியாற்றுவதற்கு அவர்களுக்கு சிக்கல் நிலைமை ஏற்பட்டிருக்கலாம். அதற்கு மருத்துவமனை நிர்வாகம் எந்த விதத்திலும் பொறுப்பாகாது. போதனா மருத்துவமனைக்கு எந்த மருத்துவ நிபுணர் வந்தாலும் அவரை வரவேற்று மக்களுக்கு சிகிச்சைகள் வழங்குவதற்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் குறிப்பிட்டவர்களை ஏன் வேறு மருத்துவனைக்குச் சென்றார்கள் என தனித்தனியாக கேட்கவேண்டும். அவர்களின் கருத்துகளைக் கேட்டபின்னர் நீங்கள் எங்களிடம் கோரினால் என்ன காரணத்துக்காக அவர்கள் வெளியேறினார்கள் என்பதை வெளிப்படுத்த முடியும்.
இருதய சத்திரசிகிச்சை நிபுணர் இங்குவந்தபோது அவருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் நாங்கள் செய்து கொடுத்தோம். மருத்துவ நிபுணர் உமாசங்கர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வந்து 4 ஆண்டுகளாகின்றன. அவரது நோயாளர்களுக்கான விடுதி வசதி இன்னமும் எம்மால் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. நோயாளர் விடுதி வசதியில்லாதபோதும் இங்கு பல மருத்துவர்கள் தங்கள் சேவைகளை வழங்கி வருகின்றனர்.
புதிதாக ஒரு மருத்துவ நிபுணர் வரும்போது, இயங்கிக்கொண்டிருக்கும் மருத்துவமனையுடன் இணைந்து - சேர்ந்து இயங்கவேண்டும். ஒரு விடுதியை உருவாக்குவதும், இயக்குவதும் இலகுவான விடயம் அல்ல. அதற்குரிய கட்டடம் தேவை, மருத்துவ உபகரணங்கள் தேவை, மருத்துவர்கள், தாதியர்கள், உதவியாளர்கள் தேவை. 120 மருத்துவ நிபுணர்கள் இருப்பதற்காக 120 பேருக்கும் 120 நோயாளர் விடுதிகளை வழங்குவது சாத்தியமற்றது. சில மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள் இணைந்து சேவையாற்றுகின்றனர். சிலர் தங்களுக்குத் தனியான நோயாளர் விடுதி தந்தால் மட்டுமே பணியாற்றமுடியும் என்று தெரிவித்தால் அதற்குரிய வசதிகளை உடனடியாகச் செய்துகொடுக்கமுடியாது. ஆனாலும் எம்மாலான அனைத்து வசதிகளையும் செய்துகொடுத்திருக்கின்றோம்.
சில மருத்துவ நிபுணர்கள் வேலையிடத்துக்குப் பழக்கப்படக் கஷ்டப்படுகின்றனர். மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றுவதில் பிரச்சினைப்படுகிறார்கள். இது ஒரு பொது மருத்துவமனை. அனைவருடனும் சேர்ந்தே பணியாற்றவேண்டும். அனைத்து வசதிகளையும் உடனடியாக ஏற்படுத்திக்கொடுக்கும் நிலைமையில் மருத்துவமனை இல்லை.

மருத்துவர் காண்டீபன் யாழ்ப்பாணம் மருத்துவபீடத்துக்கே வந்தவர். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குப் பணிக்கு வரவில்லை. மருத்துவபீடத்தில் உள்ள சத்திரசிசிச்சை நிபுணர் போதனா மருத்துவமனையில் உள்ள சத்திரசிகிச்சை நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றலாம். அவருக்கு உடனடியாக ஒரு மருத்துவ விடுதியை ஏற்படுத்திக்கொடுக்கும் இயலுமை எம்மிடம் இருக்கவில்லை.
அவர்கள் பணியில் இருந்து சென்றதற்கும் மருத்துவமனை நிர்வாகத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எம்மால் இயன்ற அளவு தற்காலிக ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கின்றோம். கூறப்படுவதுபோன்று ஒருவரை இங்கு பணிக்கு வரவேண்டாம் என்று தடுத்து மருத்துவமனையை நடத்தமுடியாது. அப்படிநாம் நடந்துகொண்டிருந்தால் மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கும், அதிகரித்திருக்காது.
மருத்துவ நிபுணர் முகுந்தன் இங்கிருந்து சென்ற பின்னர், இரு மருத்துவ நிபுணர்கள் இங்கு வந்து பணியாற்றியிருக்கின்றார்கள். அவர்கள் எவ்வாறு பணியாற்றுகின்றனர்?
மருத்துவமனை நிர்வாகத்தின் மீது இவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் எவ்விதமான உண்மையும் இல்லை.

**கே: சுபாஸ் ஹொட்டலில் இயங்கிவந்த நோயாளர் கிளினிக் மீண்டும் மருத்துவமனை வளாகத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இது மருத்துவமனைக்கு நெருக்கடிகளை அதிகரித்திருக்கின்றதா?**

ப: கொரோனாத் தொற்றுக்காலத்தில் சுபாஸ் ஹொட்டலில் எமது விடுதியை இயக்கியிருந்தோம். அந்தக் காணியை விலைக்கு வாங்கும் அளவுக்குத் தற்போது எம்மிடம் நிதி வசதி இல்லை. அந்தளவு நிதியை சுகாதார அமைச்சு எமக்கு வழங்காது. அதனால் மீண்டும் அந்த விடுதியை முன்னரைப் போன்று மருத்துவமனைக்குக் கொண்டுவந்திருக்கின்றோம். தற்போது நாங்கள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு ஆளுநர் ஆகியோரிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.
யாழ்ப்பாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை இடமாற்றப்பட்டால் அந்தக் கட்டடத்தை எமக்கு இரு ஆண்டுகளுக்குத் தரவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்துள்ளோம். நெருக்கடி இன்றி நோயாளர் கிளினிக்கை இயங்குவதற்காக இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றோம்.
2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இப்போது மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகம். கிளினிக் வருவோரின் எண்ணிக்கை அதிகம். நோய்களும் அதிகம். நாங்கள் அரசாங்கம் உட்படப் பல தரப்புகளிடம் உதவிகளைக் கோரி, சிறந்த மருத்துவ சேவையை வழங்கவே பிரயத்தனங்களை எடுக்கின்றோம். பொதுமக்கள் இதை விளங்கிக் கொள்ளவேண்டும்.
ஏனைய சில மருத்துவமனைகளில் சில கிளினிக்குகளை நடத்துவதற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் கோரிக்கை விடுத்திருக்கின்றார். அதையும் நடைமுறைப்படுத்தவிருக்கின்றோம்.

**கே: மருத்துவர் அர்ச்சுனா சமூக வலைத்தளங்களில் மருத்துவத்துறை சார்ந்த பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் சில மருத்துவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டிருந்தார். அது தொடர்பாக மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கின்றதா?**

ப: மருத்துவமனைக்கும், மருத்துவசேவைக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் அந்த மருத்துவர் பொது ஊடகங்களில் கருத்துகளைத் தெரிவித்து வருகின்றார். மருத்துவர் அர்ச்சுனா முன்வைத்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு நாங்கள் எழுத்து மூலம் அறிவித்திருக்கின்றோம். அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு எமக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

**கே: மருத்துவர் அர்ச்சுனா தொடர்பாக சுகாதார அமைச்சுக்குத் தெரியப்படுத்தியிருந்தபோதும், அவர் தொடர்ந்தும் சமூக வலைத்தளங்களில் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றாரே?**


ப: சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளும் தற்போது கடுமையாகத் தாக்கப்படுகின்றனர். கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் குற்றமிழைக்காதவர்கள் கடுமையான முறையில் தாக்கப்படுவது ஆரோக்கியமானதல்ல. அறிவுபூர்மான எதிர்கால சமூகத்துக்கும் அது நல்லதல்ல.
சிக்கலான ஒரு சேவையை வழங்கும்போது பல காரணிகளை ஒன்றிணைத்தே பணியாற்றவேண்டும். மருத்துவர்கள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, அபகீர்த்தி ஏற்படுத்தி இலவசமருத்துவசேவைக்கேகுந்தகம்விளைவிக்கப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகளால் எதிர்காலத்தில் பெரும் தாக்கங்கள் ஏற்படலாம். ஏனெனில் மருத்துவராக விரும்பும் மாணவன் ஒருவரின் பெற்றோர், தங்கள் பிள்ளையை வேறு துறைக்கு மாற்றலாம். மருத்துவத்துறையை மாணவர்கள் தவிர்க்க முயலலாம். படித்துக்கொண்டிருக்கும் மருத்துவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பை நாடலாம். விமர்சனம் செய்பவர்களின் பின்புலங்கள் ஆராயப்படவேண்டும். அவர்கள் தங்களைப் பிரபல்யப்படுத்திக்கொள்ள முயல்கின்றனர். தங்களை மீட்பர்களாகக் கற்பனை செய்துகொண்டு தாங்கள் சொல்வது சரி என்று அவர்கள் நினைத்துக் கொள்கின்றனர். இவர்களுக்கு உண்மையான பிரச்சினை எங்கிருக்கின்றது என்பது தெரியாது கருத்துக் கூறுகின்றனர். மருத்துவ சேவை என்பது மிகவும் சிக்கலான சேவை. அதன் உண்மையான அடிப்படைச் சிக்கல்கள் புரியாதநிலையிலேயே இவர்கள் இவ்வாறான விமர்சனங்களை முன்வைக்கின்றனர். இவ்வாறான விமர்சனங்கள் ஆக்கபூர்வமான மருத்துவசேவையை உருவாக்காது.
நான் கடுமையாக பணியாற்றுகின்றேன். ஆனால் இப்போது எனக்குக் கீழ் உள்ளவர்கள் கடுமையாகப் பணியாற்றுவார்கள் என்ற உத்தரவாதத்தைத் தரமுடியாது. இந்தப் பிரதேசத்தில் நம்பிக்கையோடு எதிர்கால மருத்துவர்கள் உருவாவதற்கு நாங்கள் அர்ப்பணிப்பான பல முயற்சிகளை எடுத்திருக்கின்றோம். ஆனால் மருத்துவத்துறை தொடர்பில் போலியான ஒரு தவறான பிம்பத்தை உருவாக்கி எதிர்கால சந்ததியை வடபகுதியில் இருந்து வெளியேற்றப் போகின்றனர்.

**கே: வடக்கில் மருத்துவத் துறைசார்ந்த பிரச்சினைகள் எழும்போது மருத்துவர் த.சத்தியமூர்த்தி இலக்கு வைக்கப்படுவது ஏன்?**

ப: பல ஊடகங்கள் எந்தக் காரணமும் இன்றி தொடர்பில்லாத விடயங்களில் எனது பெயரைப் பயன்படுத்துகின்றன. ஊடகங்களிலும், சமூக வலைத்தளத்திலும் பல விடயங்களை, எனது பெயருடன் தொடர்புபடுத்தி ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைப் பரப்புகின்றனர். காலையில் எழுந்து பார்த்தால் தினமும் ஏதோவொன்றைப் பதிவிடுகின்றனர். முள்ளிவாய்க்காலில் இருந்தபோது "ஷெல்" விழுந்த மாதிரித்தான் இந்தச் செய்திகள் எனக்கு இருக்கின்றன.
கடும் உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், சில ஊடகங்களும், தனிப்பட்ட நபர்களும் செயற்படுகின்றனர். ஆனால் நான் இவற்றுக்குப் பயந்தவன் அல்லன். நான் இவ்வாறான பொய்யான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை எதிர்த்து நிற்பேன். ஆனால் இதில் உள்ள அபாயத்தை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். என்னைப்போன்று அனைவரும் இவற்றை எதிர்கொள்ளமாட்டார்கள். எதிர்காலத்தில் இது ஒரு பேரிடராக மாற்றம்பெறும். என்னைத் தனிப்பட்டமுறையில் தாக்குவதுபோன்று ஏனையோரைத் தாக்கும்போது, அது மருத்துவச்சேவையை ஒரு கட்டத்தில் ஸ்தம்பிக்கச் செய்யும். சமூகத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தலாம். நான் ஒரு ஊடகத்தை அவதானித்தபோது அவர்கள் ஒவ்வொருவாரமும் ஒரு செய்தியைப் பிரசுரித்து போதனா மருத்துவமனைக்கும், அதன் பணிப்பாளருக்கும், மருத்துவர்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் தொடர்ச்சியாகச் செயற்படுவதைக் காணமுடிகின்றது. அந்த முயற்சியில் அவர்கள் தோல்வியடைவார்கள். ஆனால், அவர்கள் தோல்வியடைய முன்னர் இந்தச் சமூகத்தில் ஆபத்தான தாக்கத்தை ஏற்படுத்திவிடுவார்கள். உண்மையான விடயத்தை அறியாது விமர்சனத்தை முன்வைப்பது, எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைச் சில ஊடகங்கள் புரிந்துகொள்ளவேண்டும். இது ஒரு திட்டமிட்ட கூட்டுச்சதி என்றுதான் நான் நினைக்கின்றேன். ஒருபோதும் என்னைப் பாதிக்காது. நான் முள்ளிவாய்க்காலில் பணியாற்றியதைவிடவும் கடுமையாகப் பணியாற்றுகின்றேன் என்பதுதான் உண்மை. பொதுமக்களுக்கு அது விளங்காவிட்டாலும், எதிர்காலத்தில் அதை அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொதுவேட்பாளர் வந்து விட்டார்

நிலாந்தன்

தமிழ்ப் பொதுவேட்பாளர் யார் என்ற கேள்விக்கு இப்பொழுது விடை கிடைத்து விட்டது. ஆனால் கடந்த சில வாரங்களாக அந்தக் கேள்வியை முன்வைத்து பல்வேறு விதமாக விமர்சிக்கப்பட்டது. தமிழ் மக்கள் பொதுச் சபையும் கட்சிகளும் சேர்ந்து உருவாக்கிய பொதுக் கட்டமைப்பினால் ஒரு பொது வேட்பாளரைக் கண்டுபிடிக்கமுடியவில்லை என்பது ஒரு மிகப்பெரிய பலவீனமாக உருப்பெருக்கிக் காட்டப்பட்டது. ஆனால் உண்மையில் நடந்தது என்ன ?

தமிழ் மக்கள் பொதுச்சபை என்று அழைக்கப்படும் அமைப்புக்கான முதலாவது கருநிலைச் சந்திப்பு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வவுனியாவில் இடம் பெற்றது. அதன் பின் தமிழ் மக்கள் பொதுச்சபைக்கும் கட்சிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஜூன் மாதம் 29 ஆம் திகதி இறுதியாக்கப்பட்டது. அதன் பின் ஜூலை மாதம் 22 ஆம் திகதி அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை உத்தியோக பூர்வமாக கையெழுத்திடப்பட்டது. அதன் அடிப்படையில் ஒரு பொதுக் கட்டமைப்பு இயங்கத் தொடங்கியது. அத் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது ஒரு பொதுவேட்பாளரை கண்டுபிடிப்பதற்காக அன்றிலிருந்து இயங்கத் தொடங்கியது. கடந்த எட்டாம் திகதி ஒரு பொது வேட்பாளர் அறிவிக்கப்பட்டிருக்கிறார். அப்படிப் பார்த்தால் மொத்தம் 18 நாட்கள்தான் ஒரு பொதுவேட்பாளருக்கான தேடல் மும்முரமாக இடம்பெற்றது. ஒரு சமூகத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயகரமான விதங்களில் தடம் மாற்றக்கூடிய ஒரு குறியீட்டு வேட்பாளரை கண்டுபிடிப்பதற்கு 18 நாட்கள் சென்றன என்பது ஒப்பீட்டளவில் குறைவான கால அளவுதான். அதற்காக 18 மாதங்களை எடுத்துக் கொண்டால் கூட குற்றமில்லை.

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒரு பொதுக் குறியீடு என்று தொடக்கத்திலிருந்தே கூறப்பட்டு வந்தது. அவ்வாறு ஒரு பொதுக் குறியீட்டை ஏன் தேட வேண்டி வந்தது? ஏனென்றால் தமிழ் மக்கள் மத்தியில் கட்சித் தலைவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டு. ஆனால் தமிழ் அரசியல் சக்தியை ஒரு புள்ளியில் ஒன்றிணைக்கவல்ல ஜனவசிய மிக்க தலைவர்கள் அநேகமாக இல்லை. தமிழ் மக்களை ஆகக்கூடியபட்சம் ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ்; ஒரு பொதுக் கொள்கையின் கீழ் ஒன்றிணைக்கவல்ல ஜனவசியமிக்க தலைமைகள் இருந்திருந்தால் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளருக்கு தேவையே இருந்திருக்காது. எனவே ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை தேடுவதில் உள்ள சவால் என்னவென்றால், தமிழ் மக்களை ஒரு பொதுக் குடையின் கீழ் ஒன்றிணைக்க வல்ல தலைமைகளுக்கு தட்டுப்பாடு உள்ளது என்பதுதான்.

இப்பொழுது தெரிவு செய்யப்பட்டிருக்கும் பொது வேட்பாளர் அவ்வாறு எல்லாத் தகைமைகளும் உடையவர் என்று இக்கட்டுரை கூறவரவில்லை. அரசியலில் மட்டுமல்ல நடைமுறை வாழ்க்கையில் எதிலுமே 100% பூரணமானது என்று எதுவும் கிடையாது. இருப்பவற்றில் சிறந்தவற்றை வைத்துத்தான் அரசியலைக் கொண்டு போகலாம். ஏனென்றால் அரசியல் எனப்படுவது சாத்தியக்கூறுகளின் கலை. சாத்தியக்கூறுகள் என்று பார்த்தால் இருக்கின்றவைகள்தான் சாத்தியக் கூறுகள். இல்லாதவைகள் அல்ல.

இந்த அடிப்படையில்தான் ஒரு பொது வேட்பாளரை பொதுக் கட்டமைப்பு முன் வைத்திருக்கின்றது. தமிழ்ப் பொதுநிலைப்பாடு என்பது தமிழ்த் தேசிய நிலைப்பாடு தான். தமிழ்த்தேசிய நிலைப்பாட்டின் பிரதான மூலக்கூறு தாயக ஒருமைப்பாடு. அந்த அடிப்படையில் வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை உணர்வுபூர்வமாகவும் நடைமுறைச் சாத்தியமான விதத்திலும் ஒன்றிணைக்கும் தேவைகளை அடிப்படையாக வைத்து கிழக்கிலிருந்து ஒரு பொது வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

அவர் ஒரு குறியீடுதான். தமிழ் மக்கள் பொதுச் சபைக்குள் காணப்படும் கருத்துருவாக்கிகள் ஒரு பொது வேட்பாளர் தொடர்பாக கட்டியெழுப்பிய கருத்துருவாக்கம் என்னவென்றால், கிழக்கிலிருந்து ஒரு பெண் வேட்பாளர் தான். அவரும் அரசியல் கட்சிகள் சாராதவராக இருந்தால் உத்தமம் என்று கருதப்பட்டது. ஆனால் நடைமுறையில் அப்படி ஒரு பெண் வேட்பாளரைத் தேடிக் கண்டுபிடிப்பதில் நெருக்கடிகள் இருந்தன. மட்டுமல்ல, நாட்களும் குறைவாக இருந்தன. ஒரு பெண் வேட்பாளரைக் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் ஓர் ஆண் வேட்பாளரை அதாவது கட்சிசாரா ஆண் வேட்பாளரை கண்டுபிடிக்கலாமா என்று சிந்திக்கப்பட்டது. ஆனால் அங்கேயும் வரையறைகள் இருந்தன. அதன் பின்னர்தான் கட்சி சார்ந்த யாராவது இருப்பார்களா என்று தேட வேண்டி வந்தது.

ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்து பொதுக் கட்டமைப்புக்கு சட்டரீதியாக சில வரையறைகள் இருந்தன. தேர்தலில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி ஒரு வேட்பாளரை நிறுத்தலாம். அல்லது ஒரு முன்னாள் அல்லது இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுயேச்சையாகக் களமிறங்கலாம். இந்த இரண்டு சாத்தியக்கூறுகளுக்குள்ளும்தான் ஒரு பொதுவேட்பாளரைத் தேட வேண்டியிருந்தது. அதாவது தேர்தல் சட்டங்களின்படி ஒன்றில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி வேண்டும். அல்லது முன்னாள் அல்லது இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் வேண்டும்.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் உண்டு. ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற கட்சிகள் அவ்வாறு சின்னத்தைத் தருவதற்குத் தயாராகக் காணப்பட்டன. சில கட்சிகள் தரத் தயங்கின. பொதுக்கட்டமைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒரு விடயம் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கட்சியின் சின்னத்தை ஒரு பொது நிலைப்பாட்டுக்காகப் பயன்படுத்தி அதன்மூலம் திரட்டப்பட்ட வாக்குகளையும் பிரபல்யத்தையும் அடுத்து வரும் தேர்தலில் அக்கட்சி தனது தனிப்பட்ட கட்சி தேவைகளுக்கு பயன்படுத்துவது தொடர்பாக ஓர் உடன்படிக்கை எழுதப்படவேண்டும் என்று அங்கே சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் தேர்தல் ஆண்டுகளாகக் காணப்படும் ஓர் அரசியல் பின்னணியில், ஜனாதிபதித் தேர்தலை உடனடுத்து வரக்கூடிய எந்த ஒரு தேர்தலிலும் தமது கட்சி சின்னத்தைப் பயன்படுத்தாமல் விடுவது தொடர்பில் கட்சிகள் அதிகமாக யோசித்தன. இப்படிப்பட்டதோர் பின்னணியில், ஒரு சுயேச்சை வேட்பாளரைப் பொதுக் கட்டமைப்பு முன்நிறுத்தியமை என்பது கட்சிச் சின்னம் கிடைக்காத காரணத்தால் அல்ல. அதைவிட முக்கியமாக வடக்கு-கிழக்கு ஒருங்கிணைந்த தாயகத்தை பலப்படுத்தவேண்டும் என்ற நோக்கு நிலையில் இருந்துதான் என்று, தமிழ் மக்கள் பொதுச்சபையின் உறுப்பினர்கள் கூறுகிறார்கள்.

**தமிழ் மக்கள் முன் இரண்டே இரண்டு தெரிவுகள்தான் உண்டு. ஒன்று, ஒரு தேசமாகத் திரள்வது. அல்லது தன் பலம் எதுவென்று தெரியாத; தன்னைத் தானே நம்பாத; ஒரு மக்கள் கூட்டமாகச் சிதறித் தூர்ந்து போவது.**

மேலும் தமிழரசுக் கட்சிக்குள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஒருவரை பொதுகட்டமைப்பின் வேட்பாளராக நிறுத்துவது என்பது பரந்தகன்ற தளத்தில் கட்சிகளைக் கடந்த தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான அடித்தளமாகவும் அமையும்.

கடந்த 15 ஆண்டுகளாக கருத்துருவாக்கமாக காணப்பட்ட ஒரு விடயம், இப்பொழுது அடுத்த கட்ட வளர்ச்சிக்கு வந்து விட்டது. தமிழ்ப் பொதுவேட்பாளர் பரந்தகன்ற தளத்தில் தமிழ் மக்களை ஒன்றுதிரட்டுவாராக இருந்தால், அதுவே கடந்த 15 ஆண்டுகளில் கிடைத்த மகத்தான வெற்றியாக அமையும்.

தமிழ்மக்கள் எங்கே ஒன்றாக நிற்கிறார்கள்? சில நினைவு கூர்தல்களைத்தவிர மற்றெல்லா இடங்களிலும், எல்லாவற்றிலும் தமிழ்மக்கள் இரண்டாக, பலவாக நிற்கிறார்கள். வடக்காக, கிழக்காக; சாதியாக, சமயமாக; கட்சிகளாக, கொள்கைகளாக; தியாகிகளாக, துரோகிகளாக ; கட்சிகளுக்குள் அணிகளாக; முகநூலில் குழுக்களாக; திருச்சபைக்குள் அணிகளாக; ஆலய அறங்காவலர் சபைகளுக்குள் அணிகளாக ; பழைய மாணவர் சங்கங்களுக்குள் அணிகளாக; புலம்பெயர்ந்த நாடுகளில் அமைப்புகளாக; அமைப்புகளுக்குள் அணிகளாக....எல்லா இடங்களிலும் எல்லாவற்றிலும் தமிழ்மக்கள் இரண்டாக, பலவாக நிற்கிறார்கள். எங்கே ஒன்றாக நிற்கிறார்கள்? ஒன்றாக நிற்கக் கூடாது என்பதில்தானே ஒன்றாக நிற்கிறார்கள்?

தன் பலம் எதுவென்று தெரியாமல்; தன்னைத் தானே நம்பாமல்; சிதறிக் கொண்டு போகும் ஒரு மக்கள் கூட்டத்தை ஆகக்கூடிய மட்டும் பெருந் திரளாகக் கூட்டிக்கட்டுவதுதான் தேசியவாத அரசியல். ஏனெனில் தேசம் எனப்படுவது ஒரு பெரிய மக்கள் திரளாகும். தங்களைத் தேசமாக உணரும் ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுணர்வே தேசியம் எனப்படுகின்றது. அக்கூட்டுணர்வுக்கு தலைமை தாங்குவதுதான் தேசியவாத அரசியல். தமிழ்ப் பொதுவேட்பாளர் என்று தெரிவின் முதன்மை நோக்கமும் அதுதான்.

ஒன்று திரண்ட தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன தேவை என்பதை வெளி உலகத்துக்கு ஒரே குரலில் கூறுவார்களாக இருந்தால், தமிழ் மக்களின் பேர பலம் அதிகரிக்கும். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் கடந்த 15 ஆண்டுகளாக இன அழிப்புக்கு எதிராக நீதி கிடைக்கவில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை.

2009 மே மாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது ஆயுதப் போராட்டம்தான். அது ஒரு விளைவுதான். மூல காரணமாகிய ஒடுக்குமுறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது. அதாவது இன ஒடுக்குமுறை நிறுத்தப்படவில்லை. இன ஒடுக்குமுறை எனப்படுவது தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாகத் திரண்டிருப்பதை அழிப்பதுதான். தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் காரணிகளை அழிப்பதுதான். அதனால், ஒடுக்குமுறைக்கு எதிராக ஒரு பெரும் திரளாக; தேசிய இனமாக தமிழ் மக்களைத் திரட்டி எடுப்பதுதான் தேசியவாத அரசியல். தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற முடிவு அந்தக் கொள்கை வழிபட்டதே.

எனவே தமிழ் மக்கள் முன் இரண்டே இரண்டு தெரிவுகள் தான் உண்டு. ஒன்று, ஒரு தேசமாகத் திரள்வது. அல்லது தன் பலம் எதுவென்று தெரியாத; தன்னைத் தானே நம்பாத; ஒரு மக்கள் கூட்டமாகச் சிதறித் தூர்ந்து போவது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
11 ஓகஸ்ட் 2024



# மீளுமா வங்கம்?

ஆர்.பிரகாஷ்

53 ஆண்டுகளுக்கு முன்னர், இன்னும் சரியாகச் சொல்வதானால் 1971ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் திகதி டாக்காவில், லட்சக்கணக்கான மக்கள் திரண்டிருக்கையில் ஒரு சிங்கம் தன் பிடரிமுடியைச் சிலுப்பிக் கர்ச்சித்தது. 'இன்று எம் உயிர்கள் எடுத்துக்கொள்ளப்படலாம். ஆனால், அவை எங்கள் கனவுகளுக்கான விலை. எங்கள் போராட்டம் விடுதலைக்கான போராட்டம். உரிமைக்கான போராட்டம். இந்தப் போராட்டத்தின் அரண்கள் பீரங்கிகளால் கவசமிடப்பட்ட சுவர்கள் அல்ல. மாறாக எங்கள் ஒவ்வொருவருடைய வீடுகளும்தான்' என்று கர்ச்சித்த அந்தச் சிங்கத்தின் பெயர் ஷேக் முஜிபுர் ரஹ்மான்.

சுதந்திர வங்கத்துக்காக தன் உயிரைப் பணயம் வைத்துப் போராடிய அவர்தான் பின்நாள்களில் 'வங்கத்தின் தந்தை' என்று அறியப்பட்டார். வங்கத்தில் தற்போது இடம்பெற்றுவரும் கலவரங்களால், தலைநகர் டாக்காவில் அமைக்கப்பட்டிருந்த 60 அடிகள் உயரமுடைய 'வங்கத் தந்தையின்' சிலை சுக்குநூறாக உடைக்கப்பட்டிருக்கின்றது. ஏனெனில், அவர்தான் இப்போது இடம்பெற்றுவரும் கலவரங்களுக்கெல்லாம் காரணமாக இருந்த ஷேக் ஹசீனாவின் தந்தையும்கூட.

## போர்க்களமான வங்கம்

வெறும் இரண்டு வாரங்களில் பங்களாதேஷில் இடம்பெற்று முடிந்த சம்பவங்கள் கற்பனைக்கும் அப்பாற்பட்டவை. ஒன்றல்ல இரண்டல்ல ஐந்து தடவைகள் நாட்டின் பிரதமராக இருந்தவரும், 'வங்கத்தின் தலைமகள்' என்று வர்ணிக்கப்பட்டவருமான ஷேக் ஹசீனா, இலங்கையின் முன்னாள் அதிபர் கோத்தாபய எவ்வாறு அரகலய மூலம் விட்டியடிக்கப்பட்டாரோ அதே பாணியில் விரட்டப்பட்டிருக்கின்றார்.

கொலைகள், தீவைப்புகள், கொள்ளைகள், சிறை உடைப்புகள், ஆயுதக் கடத்தல்கள் என போர்க்களப் பூமியாக வங்கம் இன்று மாறியிருக்கின்றது. இதற்கெல்லாம் என்ன காரணம்...? ஏன் இந்தப் போராட்டம்...?

வங்கத்தில் இன்று இடம்பெற்றுவரும் போராட்டங்களின் ஆரம்பப் புள்ளி, அரச வேலை வாய்ப்புகள் இல்லாத நிலை என்றால், உங்களால் நம்ப முடிகின்றதா? ஆனால் உண்மையும் அதுதான். நாட்டின் அரச வேலைகளில் 30 வீதமானவற்றை சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் குடும்பங்களுக்கு ஒதுக்குவதாக சட்டத்தைக் கொண்டுவந்தார் ஷேக் ஹசீனா. 1971 சுதந்திரம் பெற்ற பங்களாதேஷில் 1972ஆம் ஆண்டில் இருந்தே இந்த நடைமுறை இருந்தாலும், மாணவர்கள் போராட்டங்களால் 2018ஆம் ஆண்டு அது விலக்கிக் கொள்ளப்பட்டது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் அதை மீண்டும் கொண்டுவருவதற்கு ஷேக் ஹசீனா அரசாங்கம் திட்டமிட்டதன் விளைவே, இன்று வங்கத்தின் கட்டடக்காடுகள் தீப்பற்றி எரிவதற்கான ஆரம்பப் பொறி.

பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துவரும் நாடாக வங்கம் இருந்தாலும், தொழில் பெருக்கத்தில் தொடர்ந்து தேய்ந்த நிலையிலேயே அது இன்றும் இருக்கின்றது. இவ்வாறிருக்கையில் 30 வீதமான வேலைவாய்ப்பை சுதந்திரப்போராட்டத் தியாகிகளின் குடும்பங்களுக்கு தாரைவார்த்தால் தமக்கு எதிர்காலம் இல்லை என்று வங்கத்தின் இளைஞர்கள் இதயத்தில் ஏற்பட்ட பயம்தான் ஷேக் ஹசீனா அரசாங்கம் இன்று அடியோடு பெயர்த்தெறியப்படுவதற்குக் காரணம்.

## மெத்தனமும் ஆக்ரோஷமும்

ஆரம்பத்தில் வேலைவாய்ப்பு இட ஒதுக்கீட்டைக் கைவிடுமாறு மாணவர்கள் ஜனநாயக வழியிலேயே போராடினார்கள். ஆனால், ஐந்தாவது தடவையாகப் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்ட அகங்காரம் ஷேக் ஹசீனாவை மாணவர்களின் கோரிக்கைகளை அனுமதிக்க இடமளிக்கவில்லை. மாணவர்களின் போராட்டங்கள் பொலிஸாரின் ஆயுதங்களால் அடக்கப்பட்டன. டாக்காவில் இடம்பெற்ற போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒன்பது மாணவர்கள் உயிரிழந்ததையடுத்தே அனைத்தும் கைமீறின. இப்போது மாணவர்களுக்குத் தேவை வேலைவாய்ப்பல்ல. ஷேக் ஹசீனா பதவி விலகவேண்டும். அவர் அரசாங்கம் துடைத்தெறியப்படவேண்டும் என்பது. பேரணிகளும் போராட்டங்களும் கலவரங்களாக மாற்றம்பெற வெறும் நான்கு நாள்களே போதுமாகவிருந்தது. விளைவாக நாட்டில் பாதுகாப்பின்றி தலைதெறிக்கத் தப்பித்தோடினார் தலைமகள்.

வங்கத்தில் ஊடுருவுவதற்காகக் காத்துக்கிடந்த சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு இந்தப் போராட்டம் ஆகப்பெரும் போன்ஸுகளை வழங்கியிருக்கின்றன. வங்கத்தில் சீன முதலீடுகள் இருந்தாலும், சீனத்தின் பட்டுப்பாதைத் திட்டத்துக்கு அந்த நாடு அவ்வளவு பெரிய ஒத்துழைப்புகளை வழங்கியதாகவில்லை. இன்னும் சொல்லப்போனால் மறைமுக முட்டுக்கட்டை களையே போட்டது.

தவிர, உலகின் மூன்றாவது பெருவர்த்தகப் பரப்பான இந்துமா சமுத்திரத்தில் இந்தியாவின் ஆதிக்கத்துக்காகவே ஷேக் ஹசீனா தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருந்தார். இதனால், அவரை அப்புறப்படுத்தவேண்டிய தேவை சீனாவுக்கு இருந்தது. பாகிஸ்தானிடம் இருந்து வங்கத்தை சுதந்திரமடையச் செய்தவர் ஷேக் ஹசீனாவின் தந்தையே. இதனால், ஒரு வரலாற்றுப் பகை ஷேக் ஹசீனாவிடத்தில் பாகிஸ்தானுக்கு இருந்தது. இந்தக் கடன்களை அந்த நாடுகள் ஊடுருவல் சக்திகள் மூலமும், உளவுப் பிரிவுகள் மூலமும் தீர்த்துக் கொண்டன.

சீனாவின் பணம் தேவைக்கு அதிகமாக இதில் விளையாடியிருக்கின்றது என்று வெளிப்படுத்தியிருக்கின்றது இந்திய உளவுத்துறை. போராட்டங்கள் ஷேக் ஹசீனாவுக்கு எதிரானதாக மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த தேசக் கட்டமைப்புக்கும் எதிராகத் திரும்பியிருப்பதும் அதையே பறைசாற்றுகின்றது.

## இடைக்கால அரசு

கிராமியப் பொருளாதாரத்தை குறுங்கடன்கள் மூலம் வளப்படுத்தக்கூடிய பொருண்மியக் கொள்கையை அறிமுகப்படுத்தி, நோபல் பரிசில் வென்ற பொருளாதாரப் பேராசிரியர் மொகமட் யூனுஸ், மாணவர்களின் கோரிக்கைக்கு அமைய பங்களாதேஷின் இடைக்கால அரசின் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கின்றார். சீனத்துக்கு ஒரு மாவோ. சிங்கப்பூருக்கு ஒரு லீ யுவான் போல் வங்கத்தின் பொருண்மிய மீளெழுச்சிக்கு மொகமட் யூனுஸ் ஒரு திருப்பமாக அமைவாரா? வங்கம் அதிசயங்களை நிகழ்த்தப் போகின்றதா? என்பதற்குக் காலம்தான் பதில். ஆனால், இதுவரையான கலவரங்களால், 120 பில்லியன் அமெரிக்க டொலர் நேரடிப் பொருளாதார இழப்பைச் சந்தித்திருக்கின்றது பங்களாதேஷ். மறைமுகப் பொருளாதார இழப்புடன் ஒப்பிடுகையில் இந்தத் தொகை 300 பில்லியன் டொலருக்கும் அதிகம் என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள். இரண்டு வாரகாலக் கலவரங்களால் மூன்று ஆண்டுகள் பின்சென்றிருக்கின்றது பங்களாதேஷ். இப்பேர்ப்பட்ட நிலையிலிருந்து ஒரு நாட்டை மீளக் கட்டியெழுப்புதல் அவ்வளவு இலகுவான காரியமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இரவில் கடத்தப்பட்ட பெண் ஊடகவியலாளர்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

கே.வி.தவராசா

## மனு விசாரணைக்கு ஏற்பு

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட முதல் நாளன்றே, இந்த மனுவை தொடர்ந்தும் விசாரணைசெய்ய அனுமதியளிப்பதாக உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அறிவித்தனர். பரமேஸ்வரி சார்பாக தாக்கல் செய்திருந்த இந்த மனுவில், தான் ஓர் இந்திய வம்சாவளிப் பெண் எனவும் மலைநாட்டிலுள்ள கம்பளை தனது ஊரெனவும் தான் சிறிதுகாலம் வீரகேசரிப் பத்திரிகையிலும் பின்னர் கடத்திச் செல்லப்படும் பொழுது 'மௌபிம' என்ற வாராந்த சிங்களப் பத்திரிகையின் நிருபராகவும் கடமையாற்றியதாகவும் தானும் சுகந்திகா தம்பிராஜாவும் வெள்ளவத்தையிலுள்ள பெண்கள் விடுதியில் தங்கியிருந்ததாகவும், பத்திரிகை நிருபரான தான் பல முக்கியமான அரசியல் பிரமுகர்களையும் அரச உயர் அதிகாரிகளையும் பொலிஸ் அதிகாரிகளையும் நேர்காணல் கண்டு அதனையே பத்திரிகையில் பிரசுரித்ததாகவும் அதைத் தவிர, தான் எந்தவித சட்டவிரோதமான காரியத்திலும் ஈடுபடவில்லையெனவும் கூறியிருந்தார். பத்திரிகை நிருபர் என்றமுறையில் தனது கடமையையே புரிந்துள்ளதாகவும் தன்னை என்ன காரணத்துக்காக கைது செய்து தடுத்து வைத்துள்ளார்கள் என்று கூறப்படவில்லையெனவும் தன்னைக் கடத்தியவர்களில் ஒருவர் தன்னைப் பயமுறுத்தி ' நீர் இனிமேல் 'மௌபிம' பத்திரிகைக் காரியாலயத்தில் வேலை செய்யக்கூடாது. அத்துடன் எந்தப் பத்திரிகைக்கும் இனிமேல் எழுதவும் கூடாது' என அச்சுறுத்தியதாகவும் தன்னைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பது நேரடியாகவே ஜனநாயகத்துக்கும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் கொடுக்கப்பட்ட அடி எனவும் அவரது மனுவில் குறிப்பிடப்பட்டது.



## ஊடகவியலாளர்கள் போராட்டம்

பரமேஸ்வரியைத் தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடியாக அவரை விடுதலை செய்யக்கோரியும் பரமேஸ்வரி சார்பாக சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரம் (Sir Lanka Musilm Media Forum) பெடரேசன் ஒப் மீடியா எம்புளொயஸ் டிரேட் யுனியன் (Federation of Media Employers Trade Union) சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு (Free Media Movement) சிறிலங்கா தமிழ் மீடியா (Sir Lanka Tamil Media Alliance) ஆகிய நான்கு அமைப்புகளையும் கொண்ட இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் (Sir Lanka Workign Journalists Association) தமது கடும் எதிர்ப்பை வெளிக்காட்டி பரமேஸ்வரியை விடுதலை செய்யும்படி பல போராட்டங்களை தலைநகரத்தில் பல இடங்களில் தொடர்ச்சியாக நடத்தின. இந்தப் போராட்டங்களைத் தொடர்ந்து சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு தனது அறிக்கையில், தங்களுடைய பிரதிநிதிகள் பரமேஸ்வரியை சென்று பார்வையிட பொலிஸ் அதிகாரிகளிடம் அனுமதி கோரியதாகவும் ஆனால் சக பத்திரிகையாளர்களான தமக்கு அனுமதி மறுக்கப்பட்டமையால் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் பல போராட்டங்களை நடத்த இருப்பதாகவும் அறிவித்தது.

## பரமேஸ்வரி விடுதலை

பரமேஸ்வரி சார்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு விசாரணைக்கு வந்த வேளையில் பயங்கரவாதத் தடைப்பிரிவு பொலிஸாரின் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகிய சிரேஷ்ட அரச சட்டத்தரணி றொசிகா டி சில்வா, மனுதாரரான பரமேஸ்வரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு எந்தவித ஆதாரமில்லையெனவும் எந்தவித சான்றும் இல்லாத காரணத்தால் பரமேஸ்வரியை விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் பரமேஸ்வரியை விடுதலை செய்யும்படி பிரதான நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்திருப்பதாகவும் உயர்நீதிமன்றில் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து பரமேஸ்வரி விடுதலைசெய்யப்படவுள்ள விடயம் பத்திரிகைத்துறைக்குத் தெரியவந்ததையடுத்து நூற்றுக்கணக்கான பத்திரிகைத் துறையைச் சேர்ந்தோரும் பரமேஸ்வரி பணிபுரிந்த பத்திரிகையான மௌபிம வின் நிர்வாகிகளும் நீதிமன்ற வாயிலில் பேனையால் செய்யப்பட்ட மாலைகள், மலர்ச்செண்டுகள் என்பவற்றுடன் நிறைந்து காணப்பட்டனர்.

நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பரமேஸ்வரி நீதிமன்றுக்கு வெளியே வந்தபொழுது அவருக்கு பேனாமாலை அணிவிக்கப்பட்டதுடன், மலர்ச்செண்டும் கொடுத்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். பரமேஸ்வரி வெளியே வந்து தனக்காக பாடுபட்ட சகல பத்திரிகை அமைப்புகளுக்கும், சக நண்பர்களுக்கும் தனக்காக நீதிமன்றில் வாதாடிய சட்டத்தரணிகளுக்கும் நன்றி கூறினார்.

இந்த விடுதலையையடுத்து (Sir Lanka Workign Journalist Associations) இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் சட்டமா அதிபர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட மௌபிம பத்திரிகையின் நிருபர் பரமேஸ்வரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு சான்று இல்லையென கூறி அவரை விடுதலை செய்ததற்காக சட்டமா அதிபரின் முடிவை வரவேற்றதுடன் இது உண்மைக்கும், நீதிக்கும் கிடைத்த வெற்றியென்றும் ஆனால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நான்கு மாதம் வரை தடுத்து வைக்கப்பட்டமை துரதிர்ஷ்டவசமானது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் மூன்று சிங்களப் பத்திரிகையிலும் சுகந்திகா தம்பிராஜாவின் வாக்குமூலத்தில் கூறப்பட்டதாகப் புனையப்பட்ட பத்துக் கிலோ எடை கொண்ட மனிதவெடிகுண்டு பற்றிய செய்தி முற்றுமுழுதாக தீயநோக்குடன் மூன்று பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டமை வெளிச்சத்துக்கு வந்துள்ளதெனவும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினைத் தவறான நோக்கத்தில் பயன்படுத்தி ஊடகவியலாளரிடையே பிளவை ஏற்படுத்த இந்தச்சட்டம் பாவிக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டு அறிக்கையை வெளியிடப்பட்டது.

## சுகந்திகா ஒரு தற்கொலைக் குண்டுதாரி

இந்த வழக்கின் இன்னுமொரு முக்கியமான நிகழ்வு யாதெனில் பரமேஸ்வரி சார்பாக உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு நடந்து கொண்டிருந்த வேளையில் உயர் நீதிமன்றுக்கு பரமேஸ்வரியை விடுதலைசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அரச சட்டத்தரணி உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்து சட்டமா அதிபர் திணைக்களம் எழுத்து மூலமாக அப்போதைய பொலிஸ்மா அதிபருக்கு பரமேஸ்வரியையும் அவருடன் சேர்த்துக் கைதுசெய்யப்பட்ட சுகந்திகா தம்பிராஜாவையும் விடுதலை செய்யும்படி அறிவுறுத்தல் அனுப்பியிருந்தது.

இந்த அறிவுறுத்தல் அனுப்பிய வேளையில் புலனாய்வுப் பிரிவினர் தமது விசாரணை அறிக்கையில் பரமேஸ்வரியுடன் கைதுசெய்யப்பட்ட சுகந்திகா தம்பிராஜா நன்கு பயிற்றப்பட்ட தற்கொலைக் குண்டுதாரியெனவும், தற்கொலைக் குண்டுத்தாக்குதலை நடத்த கொழும்புக்கு வந்துள்ளாரெனவும் தெரிவித்திருந்தனர். புலனாய்வுப் பிரிவினரின் இந்த அறிக்கையைப் பார்த்த பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் உடனடியாக சுகந்திகாவின் விடுதலை சம்பந்தமாக மீள்பரி சீலனை செய்யும்படி சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கேட்டிருந்தனர். அத்துடன் பொலிஸ்மா அதிபரான விக்டர் பெரேரா சுகந்திகாவை விடுதலைசெய்ய எடுத்த முடிவை மீள்பரிசீலனை செய்யும்படி சட்டமா அதிபரை வேண்டிக்கொண்டார். சுகந்திகாவை புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் பின்தொடர்ந்து விசாரணை மேற்கொண்டதுடன் அவரைப்பற்றிய சகல விவரங்களையும் தகவல்களையும் பெற்றனர். இறுதியில் சுகந்திகா ஒரு தற்கொலைக் குண்டுதாரி என்பதற்கு விசாரணையில் பல சாட்சியங்கள் உள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, சுகந்திகாவை விடுதலைசெய்ய எடுத்த முடிவு சட்டமா அதிபரினால் திருப்பி அழைக்கப்பட்டது. (Daily Mirror 3103 2007. Page A9)இதில் குறிப்பிட்டு விசேடமாக குறிப்பிடவேண்டிய சம்பவம் யாதெனில் பரமேஸ்வரியுடன் கைது செய்யப்பட்ட சுகந்திகாவையும் விடுதலை செய்யும்படி பிரதான நீதிவான் நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் அறிவுறுத்தல் அனுப்பிய பின்னர் சுகந்திகாவின் விடுதலை உத்தரவு மீளப்பெறப்பட்டது தான். பரமேஸ்வரி மட்டுமே உயர்நீதிமன்றில் அடிப்படை மனிதஉரிமை வழக்குத் தாக்கல் செய்திருந்தார். ஆனால் சுகந்திகா தம்பிராஜா அடிப்படை மனித உரிமை வழக்கினை பொலிஸாருக்கு எதிராக தாக்கல் செய்ய விரும்பாத காரணத்தினால். அடிப்படை மனிதஉரிமை வழக்கினை தாக்கல்செய்ய முன்வரவில்லை. பரமேஸ்வரி சார்பில் உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை வழக்குத் தாக்கல் செய்யப்படாது விட்டிருந்தால் சுகந்திகாவுக்கு ஏற்பட்ட அதேநிலைதான் பரமேஸ்வரிக்கும் ஏற்பட்டிருக்கும். உயர்நீதிமன்றில் சுகந்திகா சார்பில் அடிப்படை மனித உரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சுகந்திகாவை விடுதலை செய்ய சட்டமா அதிபர் முடிவெடுத்து அந்த விடுதலை செய்யும் முடிவை உயர்நீதிமன்றில் அறிவித்திருந்தால் சுகந்திகா தம்பிராஜாவின் விடுதலையை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றுக்கு அனுப்பிய பின்னர் சட்டமா அதிபரினால் மீளப் பெற்றிருக்கமுடியாது.

## சுகந்திகா விடுதலை

கைதுசெய்யப்பட்ட தினத்திலிருந்து 16 மாதங்கள் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டு பல கோணங்களில் விசாரணை நடத்திய பொலிஸாரினாலும் அப்போதைய பொலிஸ்மா அதிபராலும் சுகந்திகாவுக்கு எதிராக எந்தச்சான்றையும் வழக்கில் முன்வைக்கமுடியவில்லை. அதைத் தொடர்ந்து கொழும்பு பிரதான நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்றினால் அவர் விடுதலை செய்யப்பட்டார். இவரது விடுதலையை அடுத்து பி.பி.சி. சிங்களச் சேவை (BBC Sinhala.com) பொலிஸ் பேச்சாளரான என்.ஏ.இலங்கக்கோனிடம் (ஓய்வு பெற்ற பொலிஸ்மா அதிபர்) இந்த விடுதலை சம்பந்தமாக நேர்காணல் கண்டபொழுது ' ஏன் சுகந்திகா தம்பிராஜா ஒரு தற்கொலைக் குண்டுதாரி எனப் பத்திரிகை மூலம் பெரும் விளம்பரம் கொடுக்கப்பட்டது?' என்று கேட்டது. அதற்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் "அவ்வாறு அவர் ஒரு தற்கொலைக் குண்டுதாரி என பிரசாரம் செய்தமைக்கு பத்திரிகையாளர்களே பொறுப்புக் கூறவேண்டும், அவ்வாறு பத்திரிகைகளில் பிரசுரிக்குமுன் உண்மையான தகவல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்புகொண்டு தகவலின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தியே பத்திரிகையில் பிரசுரித்திருக்க வேண்டும்" என்று கூறினார். இந்த வழக்கில் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டு நான்கு மாதங்களில் விடுதலையான பரமேஸ்வரியும் 16 மாதங்களின் பின் விடுதலையான சுகந்திகாவும் செய்யாத தவறுக்காக தண்டிக்கப்பட்டனர். அதிலும் கைதுசெய்யப்பட்ட பரமேஸ்வரி கைது செய்யப்பட்ட தினத்திலிருந்து நான்கு மாதங்களில் விடுதலை செய்யப்பட்டபொழுதும், விடுதலை செய்யப்பட வேண்டிய சுகந்திகாவை மேலும் 12 மாதங்கள் தடுத்துவைத்து விசாரணை செய்த போதிலும் பொலிஸாருக்கு எந்தவிதமான சான்றும் கிடைக்கவில்லையாம். சில சமூக விஷமிகள் திட்டமிட்டு பிழையான தகவல்களை பொலிஸாருக்கு வழங்கி பரமேஸ்வரியையும் சுகந்திகாவையும் பழிவாங்கும் நோக்கத்தில் செயற்பட்டுள்ளனர். தமக்கு வழங்கப்பட்டது உண்மைக்கு மாறான தகவல் என்பதைக் கண்டுபிடிக்க பொலிஸாருக்கு 16 மாதம் தேவைப்பட்டுள்ளது. சில ஊடகவியலாளர்கள் இந்தக் கடத்தல்பற்றி உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டிருந்தாலும் கூட பெரும்பாலான ஊடகவியலாளர்கள் பரமேஸ்வரியின் விடுதலைக்காக முன்னின்று உழைத்தனர். பரமேஸ்வரியும் சுகந்திகாவும் உள்நாட்டு யுத்தம் கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் நீதி கேட்டு ஒற்றுமையாகப் பாடுபட்டமைக்கும் நியாயத்துக்கும் கிடைத்த வெற்றியென்றால் அது மிகையாகாது.




சுகந்திகா தம்பிராஜாவுக்கு சுவிட்சர்லாந்து நாடு அகதி அந்தஸ்து வழங்கியபோதிலும் அங்கு செல்ல விமானக் கட்டணத்தைச் செலுத்தும் வசதி சுகந்திகாவுக்கு இருக்கவில்லை. இதற்கான வசதியும் செய்து கொடுத்து சுவிட்சர்லாந்துக்கு நாம் அனுப்பி வைத்தோம். அதற்காக கௌரி சங்கரி எடுத்துக்கொண்ட அக்கறை மிகவும் முக்கியமானது. ஏனெனில் தனது இரத்த சகோதரமொன்றுக்கு எப்படியெல்லாம் ஈடுபாட்டுடன் உதவுவதற்கு முயற்சி எடுப்பாரோ அப்படியே அவர் சிரத்தையெடுத்துக்கொண்டார். அதுதான் கௌரியின் இயல்பு.

(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

**கே: உங்கள் பெயரைத் தொடர்புபடுத்திப் பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. அந்தக் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்றால் அவை தொடர்பில் நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?**

ப: என்னுடைய முதலாவது விருப்பத்துக்குரிய துறை மருத்துவமும் அதுதொடர்பான அபிவிருத்தியும்தான். நாங்கள் எப்படி மருத்துவமனையை அபிவிருத்தி செய்யலாம் என்பதைப் பற்றியே சிந்திக்கின்றோம். எமக்குத் தெரியும் இந்தச் சேவையை எப்படி மேம்படுத்துவது என்று. நான் இந்த மருத்துவமனையில் இருந்து வெளியேறும்போது, பாதுகாப்பாக இன்னொருவரிடம் கையளித்துவிட்டே வெளியேறுவேன்.

ஏன் இந்தளவு கடுமையாக நான் இலக்கு வைக்கப்படுகின்றேன் என்பது எனக்கு விளங்கவில்லை. ஆனால், இந்த விடயத்துக்குள் பெரிய ஒரு சக்தி இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றேன். அவர்களுக்கு ஒரு பெரிய அரசியல் ஆசை இருக்கலாம். எங்களைப் போன்றவர்களைத் தாக்கி தாங்கள் பெரியவர்கள் என்று காட்ட அவர்கள் திட்டமிடலாம்.

இப்போதுள்ள ஊடக கலாசாரத்தால் என்னைப்பற்றி தவறான தகவல்கள் பரப்பப்படலாம். நான் மருத்துவச்சேவையைச் சரியாகச் செய்பவன் என்ற ரீதியில் என்னைப் பற்றித் தவறாக நினைத்துக்கொண்டாலும் நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. என் முன்னால் பெரும் கடமையிருக்கின்றது. இவ்வாறான பொறுப்பற்ற ஆதாரமற்ற கருத்துகள் ஒவ்வொருவருக்கும் பதிலளித்துக் கொண்டிருக்கமுடியாது அல்லது ஒவ்வொன்றுக்கும் நீதிமன்றத்தை நாடிக்கொண்டிருக்கமுடியாது. இவ்வாறான விடயங்களில் நான் கவனத்தைச் செலுத்தினால் தோல்வியடைந்தவனாக மாறிவிடுவேன். என்னுடைய பெயர் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அதுதொடர்பில் ஒரு சட்டத்தரணியிடம் கலந்தாலோசிப்பதற்குக்கூட நேரம் இல்லை என்பதுதான் உண்மை. மருத்துவமனையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் பயணிக்க வேண்டியிருக்கின்றது. எனது பணிகளையும் செய்ய வேண்டியிருக்கின்றது. இவை எதிர்கொள்கின்ற சக்தி எனக்கு இருக்கின்றது. அது இப்போதல்ல, எப்போதுமருத்துவராகப் பணியாற்றி ஆரம்பித்தேனோ அப்போதிருந்தே எனக்கு இருக்கின்றது. எங்கள் மீது 90 வீதத்துக்குமேற்பட்ட மக்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை முதலில் பாதுகாக்க வேண்டும். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வழங்கப்படும் சேவைகளை ஒரு தளம்பல் இல்லாது தொடர வேண்டும். அதற்காகவே இரவு பகலாக பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மீதும், மருத்துவர்கள் மீதும் சுமத்தப்படும் அபாண்டமான குற்றச்சாட்டுகளுக்கு நீதி கேட்போம். அதற்கான வழிமுறைகள் இருக்கின்றன. நீதிமன்றம் உள்ளது, சுகாதார அமைச்சு உள்ளது. அவற்றின் ஊடாக நாங்கள் நடவடிக்கை எடுப்போம். நாங்கள் வேறொருவர் மீது சேறு பூசவோ, குற்றங்காணவோ முயலவில்லை.

**கே: மருத்துவர் சத்தியமூர்த்தி தாக்கப்படுவதற்குக் காரணம் அவர் அரசியலுக்கு வரலாம் என்ற அச்சமாக இருக்குமா?**

ப: அரசியலுக்கு வரும் எண்ணம் எனக்கு இல்லை. இப்போது நடந்த சம்பவங்கள் எனது நிலைப்பாட்டை இன்னமும் வலுவடையச் செய்திருக்கின்றன. எனது ஓய்வு காலத்துக்குப் பின்னரும் இது தொடர்பாகச் சிந்திக்கமுடியாத ஒரு மன நிலைக்கு வந்திருக்கின்றேன்.

2009 ஆம் ஆண்டு நான் வந்த பின்னர் 2010 ஆம் ஆண்டு பல்வேறு அரசியல் கட்சிகள் என்னைச் சந்தித்தனர். நாங்கள் அனைத்து அரசியல்வாதிகளுடனும் கதைப்பதுண்டு. ஆனால் தனிப்பட்ட எந்த அரசியல்வாதிக்கும் நான் ஆதரவு வழங்கமாட்டேன். என்னை நம்பி இருக்கும் மக்களும், என்னுடன் இருப்பவர்களும் என்னுடைய இந்த நடுநிலைமையை விரும்பக்கூடும். அதனால் அதில் அவதானமாகவே இருக்கின்றேன். இலங்கைப் பிரஜை என்ற ரீதியில் எனது வாக்கை ஒருவருக்கு வழங்குவேன்.

**கே: மருத்துவர் சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் பதவியை இறுகப் பிடித்து வைத்திருக்கின்றார் என்று விமர்சிக்கப்படுகின்றதே?**

ப: நான் வடபகுதிக்கு விருப்பத்தோடு, ஒரு திட்டத்துடனேயே சேவையாற்ற வந்தேன். பொறுப்பான ஒருவர் வருவராக இருந்தால் எனது பொறுப்பைக் கையளித்துவிட்டு மகிழ்ச்சியுடன் செல்வேன். இந்த மருத்துவமனையை என்னளவில் அல்லது என்னைவிடச் சிறப்பாக கொண்ட நடத்தவேண்டும். அவ்வாறானவர்கள் வருவார்கள். அவர்களுக்காகவே காத்துக் கொண்டிருக்கின்றேன்.

பொறுப்பைப் பாதுகாப்பாகத் திருப்தியாகக் கையளிப்பதற்கு பொருத்தமானவர் வரவேண்டும். கேட்கிறார்களே என்பதற்காக ஒருவரிடம் கையளித்துவிட்டுச் செல்லமுடியாது. அது இந்தச் சமூகத்துக்குச் செய்யும் துரோகமாகும். இப்போது 9 ஆண்டாக சேவையாற்றுகின்றேன். ஆனால் இவ்வாறான நெருக்கடிகளுடன் தொடர்ந்து சேவையாற்றுவது கடினம்.

இன்னும் இரண்டு, மூன்று வருடங்கள் சேவையாற்றுவேன். ஒரு சந்தர்ப்பத்தில் நான் திடீரெனப் பொறுப்பைக் கையளித்துச் சென்றுவிடுவேன். தகுதியான ஒருவரிடம் கையளிக்க வேண்டும். கையளித்த பின்னர் சாதாரண நபராக நான் இங்கு வந்து செல்வேன். நான் இல்லாதபோது நான் மேற்கொண்ட நடவடிக்கைகள் எந்தளவுக்கு மக்கள் நலன் நோக்கியவை என்பதை புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கின்றேன். நிச்சயமாக நான் திடீரென இங்கிருந்து சென்றுவிடுவேன்.

**கே: வடக்கு மருத்துவத்துறை அபிவிருத்திக்காக வரும் நிதி அனைத்தையும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை எடுத்துக்கொள்கின்றது என்றும், அதனால் ஏனைய மருத்துவமனைகள் பின்தங்கியுள்ளன என்றும் கூறப்படுகின்றதே?**

ப: இது ஒரு முற்றுமுழுதான பொய். வடக்கில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை விடவும் வெளியே செய்யப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளே அதிகம். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அபிவிருத்திக்காகப் பயன்படுத்திய நிதி விவரங்களை தருகின்றேன். மாகாண சபையின் கீழ் இயங்கும் 117 மருத்துவமனைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

கிளிநொச்சி மருத்துவமனையில் ஒரு கட்டடம் கட்டப்பட்டிருக்கின்றது. அந்தக் கட்டடத்தின் பெறுமதி எமது விபத்துச் சிகிச்சைப் பிரிவு பெறுமதி என்பற்றை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். விபத்துச் சிகிச்சைப் பிரிவுதான் எமக்குக் கிடைத்த பெரிய கட்டடம். ஏனையவை அனைத்தும் சிறிய கட்டங்களே.

என்னுடைய அனுமானத்தின்படி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கட்டப்பட வேண்டிய கட்டடங்கள் வெளியே கட்டப்பட்டிருக்கின்றன. அது சாவகச்சேரிமருத்துவமனையின் விபத்துச் சிகிச்சைப் பிரிவாகக்கூட இருக்கலாம். நீங்கள் அனைத்துமருத்துவ சாலைகளையும் ஆராய்ந்து பார்த்தீர்களானால் அனைத்துமருத்துவ சாலைகளிலும் போதியளவு கட்டடங்கள், உபகரணங்கள் இருக்கின்றன. கிளிநொச்சி மருத்துவமனையிலும், வவுனியா மருத்துவமனையிலும், பருத்தித்துறை ஆதாரமருத்துவமனையிலும் இருக்கின்ற சிறப்பு உபகரணங்கள் இங்கு இல்லை. குழந்தைகளைப் பராமரிக்கின்ற "இங்கு பேட்டர்" பாவனை யாழ்.போதானாவில் இல்லை. ஆனால் கிளிநொச்சி மருத்துவமனையில் இருக்கின்றது. பருத்தித்துறை மருத்துவமனையிலும் ஒரு சிறப்பு உபகரணம் இருக்கின்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குழுவே அங்கு சென்று அதைப் பயன்படுத்துகின்றது. என்னுடைய கணிப்பின்படி வடமாணத்தில் போருக்குப் பின்னர் மருத்துவத்துறைக்குச் செலவு செய்யப்பட்ட மொத்த நிதியை தொடர்பில் ஆராய்ந்தால் இந்த உண்மைகள் தெரியவரும். ஆனால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையால் வழங்கப்படும் சேவைகளை நாங்கள் கூட்டியி ருக்கின்றோம்.

> "யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையும் வினைத்திறனாக இயங்காது இருந்தால் ஏனைய மருத்துவமனைகளும் பல மடங்கு வினைத்திறன் இன்றியே காணப்படும். எம்மைப் பார்த்து ஏனைய நிறுவனங்களும் சிறப்பாக இயங்க வேண்டும் என்பதுதான் எமது விருப்பம். நாங்கள் வினைத்திறனுடன் இயங்குவதைக் குற்றமாகக் கூறமுடியுமா. உண்மையில் ஏனைய மருத்துவமனைகள் தொடர்பாக நான் கருத்துத் தெரிவிப்பது சரியல்ல. சாவகச்சேரி மருத்துவமனையில் நடந்த பிரச்சினை தொடர்பாகவும் அதனால்தான் நான் கருத்துத் தெரிவிக்கவில்லை. பலரும் என்னிடம் கேட்டார்கள். அது என்னுடைய கட்டமைப்புக்குள் இல்லாத ஒரு நிறுவனம். அதனால் அது தொடர்பில் நான் கருத்துத் தெரிவிக்க முடியாது.



**கே: யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையைவிடவும் ஏனைய மருத்துவமனைகளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றால், அவற்றால் ஏன் வினைத்திறனாக இயங்கமுடியவில்லை? போதனா மருத்துவமனையில் ஏன் நோயாளர்கள் அதிகரிக்கின்றனர்?**

ப: யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குத்தான் நான் பொறுப்பு. ஏனைய மருத்துவமனைகள் தொடர்பாக நான் கருத்துத் தெரிவிக்க முடியாது. நம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை நாங்கள் சிறப்பாக இயக்கினால் அதைப் பார்த்து ஏனைய மருத்துவமனைகளும் வினைத்திறனுடன் இயங்கும் என்பது எனது தனிப்பட்ட நம்பிக்கை.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையும் வினைத்திறனாக இயங்காது இருந்தால் ஏனைய மருத்துவமனைகளும் பல மடங்கு வினைத்திறன் இன்றியே காணப்படும்.

எம்மைப் பார்த்து ஏனைய நிறுவனங்களும் சிறப்பாக இயங்க வேண்டும் என்பதுதான் எமது விருப்பம். நாங்கள் வினைத்திறனுடன் இயங்குவதைக் குற்றமாகக் கூறமுடியுமா. உண்மையில் ஏனைய மருத்துவமனைகள் தொடர்பாக நான் கருத்துத் தெரிவிப்பது சரியல்ல.

சாவகச்சேரி மருத்துவமனையில் நடந்த பிரச்சினை தொடர்பாகவும் அதனால்தான் நான் கருத்துத் தெரிவிக்கவில்லை. பலரும் என்னிடம் கேட்டார்கள். அது என்னுடைய கட்டமைப்புக்குள் இல்லாத ஒரு நிறுவனம். அதனால் அது தொடர்பில் நான் கருத்துத் தெரிவிக்கமுடியாது.

ஆனால் நாங்கள் எம்மாலான உதவிகளை வழங்குகின்றோம். சாவகச்சேரி மருத்துவமனையில் ஏற்பட்ட பிரச்சினைகளின் பின்னர் அங்கு நேரில் சென்று ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றேன். இங்கிருந்து தாதியர்களை சத்திரசிகிச்சைக்கூட ஆயத்த வேலைகளுக்காக அனுப்பியிருக்கின்றோம். சில மருத்துவநிபுணர்கள் அங்கு சுகாதார அமைச்சின் பணிப்பின் பேரில் அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

அவர்களுடன் இணைந்து வேலை செய்து குறைபாடுகளைக் களையலாம். அதுதான் சரியான வழி. மற்றொருவர் மீது குற்றத்தைச் சுமத்தி, நான் சரியாக வேலை செய்கின்றேன் என்று வெளிப்படுத்திக்கொள்ள எனக்கு விருப்பம் இல்லை.

**கே: சாவக்சேரி மருத்துவமனையில் குழப்பங்கள் ஏற்பட்டு சில நாள்களின் பின்னர் இரவுவேளை சிகிச்சைக்கு வந்த ஒருவர் அங்கு எவரும் இல்லாது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். இந்தச் சம்பவம் மருத்துவர் அர்ச்சுனாவின் குற்றச்சாட்டுகளை**

ப: இந்தப் பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினைதான். இது சம்பந்தமாக நானும் கேள்வியையும், அதிருப்தியையும் தெரிவித்திருந்தேன்.

இவ்வளவு பிரச்சினைகள் நடந்த பின்னர் இந்தச் சம்பவம் நடந்தது. முன்னைய நாள்களில் வினைத்திறன் இல்லாது இயங்கியமையின் காரணமாக இருக்கலாம். இந்த விடயம் தொடர்பாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், கடமையில் இருந்த மருத்துவ அத்தியட்சகர் ஆகியோருக்கு என்னுடைய அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தேன்.

இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் நடக்கக்கூடாது என்ற எனது நிலைப்பாட்டை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன். அங்கு நேரடியாகச் சென்றும் இருக்கின்றேன். மருத்துவமனையின் முன்பகுதியில் கட்டமைப்பு எப்படி இருக்கவேண்டும், வரவேற்கும் பகுதி எப்படி இருக்கவேண்டும் என்பது தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கியிருக்கின்றேன். மருத்துவமனையின் வரவேற்புப் பகுதியில் கடமையாற்றுபவர்களுக்கு அதற்குரிய பயிற்சிகளை வழங்கவேண்டும். அந்த விடயத்தில் அங்கு வினைத்திறனற்ற நிலைமை காணப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

**கே: யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நீங்கள் எதிர்பார்த்திருக்கும் மாற்றங்கள், செய்யவிருக்கும் திட்டங்கள் என்ன?**

ப: இப்போது இந்த மருத்துவமனை அனைத்து வசதிகளுடனும் இயங்குகின்றது. இந்த மருத்துவமனையைத் தேசிய மருத்துவமனையாக மாற்றவேண்டும். அதற்கான பல வேலைகளை, இன்னமும் பல மடங்கு செய்ய வேண்டியிருக்கின்றது.

முக்கியமானது கட்டட வசதி. மகப்பேற்று விடுதி, இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு போன்றவற்றுக்கான கட்டடங்கள் அவசரமாக அமைக்கவேண்டிருக்கின்றது. அந்த விடயங்களில் நாங்கள் மிக ஆழமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றோம்.

மருத்துவமனைக்கு எதிராகக் கூறப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தியிருக்கின்றேன். முக்கியமான சில சத்திரசிகிச்சைகளுக்கான தேவைகள் இருக்கின்றன.

இன்னும் சில வருடங்களுக்கு முன்னரைவிடவும் வேகமாக ஓட வேண்டியிருக்கின்றது. எங்கள் மீது சேறு பூசுபவர்கள், மனம் நோகடிப்பவர்களுக்கு எங்களின் சேவை மூலமாகப் பதில் வழங்குவோம்.

தற்போது மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டமைப்பில் உடைவு ஏற்படக்கூடாது. அதில் நான் கவனமாக இருக்கின்றேன். அவ்வாறான சிதைவுகள் ஏற்பட்டால் மருத்துவசேவை சீர்குலைவு ஏற்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நில்லாதோடும் நியாயம்

○ கோகுலராகவன்




நாகராசா மாமாவை நீண்ட நாட்களாகக் காணமுடியவில்லை.
இடையில் மூன்று தடவை நான் அவரைக் கண்டபோது என்னை காண விரும்பாமல் தவிர்த்தது போல எனக்குப் பட்டது. சரி, தனிய வாழும் மனிதன். சில விருப்பு வெறுப்பு தோன்றலாம். அதனால் அவரைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை.
மற்றபடி அவர்தான் தொந்தரவு தரும் ஆள்.
ஒருநாள் மாவடிப்பிள்ளையாரை கும்பிட்டு, வரும்போது படிப்பக வாயிற்படியில் தினசரி படித்துக் கொண்டிருந்தார் .
கிட்டப் போய் "என்ன மாமா ஆளைக்காணக் கிடைக்கேயில்லை? கண்டாலும் கதைக்கிறதில்லை? "
"என்னத்தை கதைக்கிறது மாஸ்ரர்?"
வெறுப்பாக பதில் வந்தது.
"கதைக்க இப்ப கன சங்கதிகள் இருக்கல்லோ?"
"நானும் நீங்களும் கதைத்து என்ன பிரயோசனம்?"
மாமா முகத்தில் கவலை தோய்ந்திருந்தது.
"சரி மாமா வாங்கோ போவம்" இருவரும் மாமா வீட்டு தலைவாசலுக்குள் அமர்ந்து கொண்டோம்.
"இருங்கோ தேத்தண்ணி ஆத்தி வாறன். " சுடச் சுட தேநீர் வந்தது. குடிக்கத் தொடங்கினேன்.
"மாஸ்ரர் நான் கெக்கிராவையில போஸ்ட் மாஸ்டராக இருக்கையில பண்டார எண்டொரு பீயோன் இருந்தவர். பாவம் ஐந்தாவது பிள்ளை பிறக்கிற போது பெண்டில் தவறியிட்டாள். ஐந்து பிள்ளைகளையும் கடினப்பட்டு வளர்த்தான். எல்லாத்தையும் பள்ளிக்கூடம் விட்டிட்டு வேலைக்கு நேரத்திற்கு வர கஸ்ரப்படுவான். நான் அவன்ர கடிதங்களை எடுத்து பிரிச்சுக் கட்டி வைத்து விடுவேன். வந்தவுடன் எடுத்து கொண்டு போய் கொடுத்து விட்டு வருவான்.
சேர் மிச்சம் உதவி எண்டு அடிக்கடி சொல்லுவான். ஆடிக்கலவரத்தில ஐந்து நாள் என்னை விறகு கொட்டிலுக்கை ஒளித்து வைத்திருந்து காப்பாற்றினான்.
அவன்ர மகன் பிரசன்ன இஞ்சை எங்கட பக்க ஒரு பொலிஸ் ஸ்டேஷன்ல இன்ஸ்பெக்ரராக இருந்தவன். சரியான நேர்மையான அதிகாரி.
அவனுக்கு இந்த இடம் இருபத்தைந்தாவது பொலிஸ் நிலையம். பாவம் இலங்கை முழுவதும் வேலை செய்தான். என்னைக்கண்டால் எழும்பி வந்து கட்டிப் பிடித்து கதைப்பான். இப்ப பனாகொடைவில வேலையாம். இருபத்தி ஏழாவது இடம் எங்கையோ தெரியாது பாவம்"
"குடும்பம் என்ன மாதிரி?."
"பின்னாலை அலையுதுகள். " "சரி மாமா இதெல்லாம் இப்ப ஏன் கதைக்கிறியள்?"
" இல்லை இந்த அர்ச்சுனாவுக்கு சாவகச்சேரி முதலாம் இடம் இன்னும் எத்தனையோ இடம் போய் வேலை பார்க்க வேணும்.
அதை நினைக்க இது ஞாபகம் வந்து விட்டது."



> "கண்ண பரமாத்மா பாரதப் போரில் அர்ச்சுனனை கைவிட்டிருந்தால் பாரதப் போர் வேறுவிதமாகவே முடிந்திருக்கும். கண்ணன் இல்லாத அர்ச்சுனன் தனியனாக போராடி வென்றிருப்பானா?"

"பாவம்"
"பிழைக்கத் தெரியாத மனுசன்"
"அப்ப நேர்மை, நீதி, ஞாயம் எல்லாம் ஓடித்திரியும் ஒரு இடத்தில இருக்காதோ?"
"இல்லை இல்லை இருக்க விடமாட்டாங்கள்."
" தர்மத்தை சூது கவ்வும் மறுபடி தர்மம் வெல்லும்."
"சூதுதான் வாழ்க்கை என்றால் தர்மம் பற்றி யாருக்குத் தெரியும்." ?
"நிர்வாணமான ஊரில உடுப்பு போடுறவனும் முட்டாள், போட நினைக்கிறவனும் முட்டாள் மாஸ்ரர்"
மாமா கடுமையாகச்சொன்னார்.
இருவருக்கிடையிலும் நீண்ட மௌனம்.
நான் வீடு நோக்கி புறப்படத் தொடங்கினேன்..
"கண்ண பரமாத்மா பாரதப் போரில் அர்ச்சுனனை கைவிட்டிருந்தால் பாரதப் போர் வேறுவிதமாகவே முடிந்திருக்கும்.
கண்ணன் இல்லாத அர்ச்சுனன் தனியனாக போராடி வென்றிருப்பானா?"
நான் புறப்படும் போது எங்கோ ஒரு பாடல் கேட்டது.

*"திட்டம் போட்டுத் திருடிற கூட்டம்*
*திருடிக் கொண்டே இருக்கும்."*

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாட்டல்லவா? பட்டுக்கோட்டை எவ்வளவு நிதர்சனமான கவிஞன். அன்றே சொல்லிவிட்டான்.
நாகராசா மாமா கெக்கட்டம் கொட்டிச் சிரிக்கிற சத்தம் எனக்கு பின்னால் கேட்கிறது. ■



# ஊர்ப்புதினம்

பாகம் 2

○ இராகவன்

52

போனகிழமை ஹெலிகாறன் ஓட்டோவில் வெடி வைச்சதைப் பற்றிச் சொல்லியிருந்தனான்.
அப்ப ஹெலி பதிஞ்சு வாறது நோட்டீஸ் போடுறதுக்குத்தான். மூண்டு கலரில நோட்டீஸ் போடுவாங்கள். மெல்லியநீலம், தனிவெள்ளை, மெல்லியஊதா அதுகளிலையெல்லாம் ஒரே விசயந்தானிருக்கும். "பொதுமக்களே! விகாரைகள், கோவில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள் போன்ற பொது இடங்களுக்குச் சென்று தங்கியிருக்குமாறும் அதன் மூலமாகச் சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

இது தவிர வெளியில் நடமாடித் திரிவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏதும் அசம்பாவிதங்கள் நிகழ்ந்து அதனால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு நாங்கள் பொறுப்பில்லை - பாதுகாப்புப் படையினர் " என்று குறிப்பிடப்பட்டிருக்கும். அப்ப எனக்கும் சிவனுக்கும் மற்ற ஊர்ப்பொடியளுக்கும் ஹெலிகாறன் போடுற நோட்டீசுகளையெல்லாம் போட்டிபோட்டுப் பொறுக்கிறதுதான் வேலை. அதுகும் எல்லாக் கலரிலயும் பொறுக்கிறதுதான் சலன்ஞ். ஹெலிகாறன் நோட்டீஸ் போடேக்குள்ளை வானத்திலயிருந்து மூண்டு கலருகளில கொக்குகள் இறங்கிற மாதிரியிருக்கும். அப்பிடித்தானாக்கும் அண்டைக்கும் நோட்டீஸ் போடப் பதியிறான் எண்டு நினைச்சன். வெடி பறியுமெண்டு நான் கனவிலும் நினைக்கேல்ல. பக்கெண்டு மண்ட விறைச்சுது. நானும் மூத்தண்ணரும் டப்பெண்டு நிலத்தில விழுந்து படுத்தம். சரியா மூண்டு றவுண்ட் சுத்திச் சுத்தியடிச்சான். பிறகு போகிட்டான். அந்தக்கையோட உவன் இளையண்ணா ஒரு நெக்ஸ்பிறே பெட்டியில முட்ட முட்ட றவுண்ஸ் பொறுக்கிக் கொண்டு வந்தான். றவுண்ஸைத் தூக்கிப் பார்த்தால் சுடுகுது. அவன் நடந்ததையெல்லாம் சொன்னாப்போலதான் ஹெலிகாறன் ஏன் ஓட்டோவில அடிச்சவன் எண்டு விளங்கிச்சுது. இதைக்கேட்டோண்ண அம்மா, "எட குறுக்காலை போவானே! ஹெலிகாறனோடையே. முசுப்பாத்தி பண்ணினனீ? தரவையில ஹெலியை இறக்கிப் போட்டு வந்து சுட்டிருந்தாங்களெண்டால் உனக்கு விளங்கியிருக்கும். பேசாமல் புத்தகத்தை எடுத்துப்படியடா! நாசமறுப்பானே!" எண்டு வையத் தொடங்கியிட்டா. மூத்தண்ணன் அப்ப கம்பஸில 'தேர்ட் இயர்' படிச்சுக்கொண்டிருந்தவன். அவன் வீட்டால வெளிக்கிடேல்ல. அம்மா வைதாப்போல இளையண்ணன் கொஞ்ச நேரம் நல்ல பிள்ளையா மேசையிலயிருந்து படிச்சான். பிறகு மத்தியானம் சாப்பிட்டான். அந்தக்கையோட நழுவிட்டான். அம்மா கவனிக்கேல்ல. அடுத்த ட்றிப் ஹெலி இரையிற சத்தங்கேட்கேக்குள்ளதான் அம்மா இளையண்ணனைக் கூப்பிட்டுப் பாத்தா. ஆளைக்காணேல்ல. திரும்பவும் மனிசி "குறுக்கால போவான்" "குறுக்கால போவான்" வீட்டிலயெண்டு இராணாமே, பாஞ்சுகொண்டு திரியிறான்.

ஏதும் தாறுமாறாய் நடந்தால் நான் என்ன செய்வன்? ம்.... உவனுக்கு பின்னால திரிய என்னால ஏலுமே?" எண்டு வையத்தொடங்கிட்டுது. அடுத்த ட்றிப் ஹெலி வரேக்குள்ளயும் உவங்கள் பத்திரகாளி கோயிலடியில நிண்டு அதே சேட்டை விட்டிருக்கிறாங்கள். பிறகென்ன அவன் திரும்பவும் றவுண்ட் பண்ணி ஓட்டோவிலவிட்டு அடிக்கத் தொடங்கிட்டான். அண்டைக்கு மூண்டு ட்றிப் உப்பிடி நடந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ பிரஜீவன் ராம்

# இலங்கைக்குள் தமிழ்த்தேசியம்

## வரலாறும் அதன் பயணப்பாடும் 11

ஈழத் தமிழர் பண்பாட்டுக் கூறுகள் திட்டமிட்டு எதிரிகளால் அழிக்கப்படுகின்றன எனும் குற்றச்சாட்டு தமிழ்த்தேசியவாதிகளால் மிக நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது இது தொடர்பான உரையாடல் மீண்டும் சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கின்றது. பண்பாடு என்பது மக்கள் தலைமுறை தலைமுறையாக குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும் மரபுகளும் இணைந்த ஒரு தொகுதி, அதில் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துகளும் மரபுரிமையாகப் பெறப்பட்ட நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் உள்ளடங்கி உள்ளன.

அண்மைக்காலமாக பண்பாடு தொடர்பான பல ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுகளை மேற்கொண்ட பண்பாட்டு ஆய்வாளர்கள்,

ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் தனது சமூக வரலாற்று படிநிலை வளர்ச்சியின் அடிப்படையில் தோற்றுவித்துக்கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துகள், மத நடைமுறைகள், கலை வடிவங்கள், சமூக விழுமியங்கள் போன்றவற்றின் ஒன்றிணைந்த ஒரு பல்கூட்டுத் தொகுதியை பண்பாடு என வரையறை செய்ய முற்படுகின்றனர்.

அதுமட்டுமல்லாது பண்பாட்டினை பொருள் சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு என இரு வகையாக பாகுபடுத்தி உள்ளனர். பண்பாட்டு ஆய்வாளர்களின் ஆய்வின் படி ஒரு சமூகத்தின் பண்பாடு என்பது அச் சமூகத்தை சார்ந்த மக்கள் பேசும் மொழி, அணியும் ஆடை, உண்ணும் உணவு, வாழும் முறை, செய்யும் பணி, எண்ணங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றது எனும் முடிவைத் தருகின்றது.

### பண்பாடும் தேசியமும்

17 ஆம் 18 ஆம் நூற்றாண்டில் பண்பாடு பற்றிய ஆய்வுகள் அறிவார்ந்த நிலைக்குத் தரம் உயர்த்தப்பட்டன.

இக்காலப்பகுதியில் பண்பாட்டு ஆய்வாளர்களான அமெரிக்க மானிடவியலறிஞர் லூவி ஹென்றி மார்கன் மற்றும் ஆங்கிலேய மானிடவியலறிஞர் எட்வர்ட் பர்னட் டைவர் ஆகிய இருவரும் பண்பாடு என்பது ஒரு நேர்கோட்டில் பல படிநிலைகளைக் கடந்து வந்துள்ளது என நிறுவினர்.

குறிப்பாக 1871 ஆம் ஆண்டு எட்வர்ட் பர்னட் டைவரினால் எழுதப்பட்ட தொன்மைப் பண்பாடு (primitive culture) எனும் நூல் பண்பாடு பற்றிய ஆய்வினை அறிவியல் போக்காக மாற்றம் பெற வழிவகுத்தது.

இதன் விளைவு பண்பாடு பற்றிய ஆய்வுகள் புதிய பரிமாணத்தில் வளர்ச்சி பெற ஆரம்பித்தன.

பண்பாடு பற்றிய ஆய்வுகளின் வளர்ச்சி தேசம், தேசியம், தேசியவாதம் எனும் எண்ணக்கருக்களை பலமான கட்டமைப்பு வடிவம் பெற்ற வழிவகுத்தது.

காரணம், தேசம் தேசியம் தேசியவாதம் எனும் எண்ணக்கருக்கள் தோற்றம் பெறுவதற்கு அடித்தளமாக பண்பாடு காணப்படுகின்றது.

### தமிழ்த் தேசியமும் தமிழர் பண்பாடும்

இன்று எம் தமிழ்மக்கள் மனதில் நிலைத்துள்ள தமிழ்த்தேசிய உணர்வு தமிழர் பண்பாட்டிலிருந்தே கட்டமைக்கப்பட்டுள்ளது.

தமிழர் பண்பாடு தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட பண்பாட்டு ஆய்வாளர்கள் பழந் தமிழ் இலக்கியங்களில் தமிழர்களால் கையாளப்பட்ட ' சால்பு ' என்ற சொற்பதம் பண்பாட்டினைக் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது என நிறுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் பண்பாடென நாம் அடையாளப்படுத்த முயல்வது தமிழ்மக்கள் ஒவ்வொருவரினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துகளும் மரபுரிமையாகப் பெறப்பட்ட நம்பிக்கைள் மற்றும் பழக்கவழக்கங்களின் கூட்டு வெளிப்பாடாகும். இங்கு தமிழர் பண்பாடு என்பது மொழி ரீதியான பண்பாட்டின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

மொழி ரீதியாக ஒன்றிணைந்த தமிழ்மக்கள் மத்தியிலும் மத, பிரதேச, சாதி, குடும்ப ரீதியாக வேறுபட்ட பண்பாடுகள் காணப்படாலும் நாம் 'தமிழர்' (மொழிப்பற்று) எனும் மொழிரீதியான பண்பாடு தமிழ்மக்களை ஏனைய பிரிவினைவாத சிந்தனைகளைக்கடந்து மொழி ரீதியான உணர்வினால் ஒன்றிணைக்கின்றது.

### ஈழத்தமிழர் பண்பாடு

இலங்கையில் ஜனநாயக ஆட்சி முறைமையை அறிமுகப்படுத்திய பிரித்தானியர் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் பண்பாட்டை அழிக்க முற்பட்டவேளை இலங்கை மக்கள் தத்தம் இன அடையாளத்தை பாதுகாக்க பண்பாட்டை இறுகப்பற்றிக் கொண்டனர். இதன் வெளிப்பாடாகவே அன்று காலத்துவ ஆட்சிக்கு எதிராக மது ஒழிப்பு இயக்கம், மத மறுமலர்ச்சி இயக்கம் போன்றன உருப்பெற்றன.

அதிலும் அநாரிக தர்மபால தலைமையில் தோற்றம் பெற்ற பௌத்த மதமறுமலர்ச்சி இயக்கத்தின் கருத்துகள் சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள - பௌத்த பண்பாட்டை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கியது. இதுவே சிங்கள மக்கள் மனதில் சிங்களத் தேசியவாத உணர்வு கிளர்ந்தெழவும் வழிவகுத்தது.

ஆரம்பத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு எதிராக வெளிப்பட்ட சிங்கள - பௌத்த தேசியவாத உணர்வு பின்னாளில் சிறுபான்மை இன மக்களை அடக்கி ஒடுக்கும் தீவிர சிங்கள - பௌத்த தேசியவாத உணர்வாக உருப்பெற்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர், அரச ஆதரவுடன் தீவிர சிங்கள - பௌத்த தேசியவாதிகள் சிறுபான்மை இன மக்களின் இன அடையாளத்தை அழிக்கும் நிகழ்ச்சி நிரலை திட்டமிட்டு மேற்கொள்ள ஆரம்பித்தனர். அதில் ஒரு பகுதியாக இந்திய வம்சாவளித் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. இந்நிலை தொடருமாயின் நாளை ஈழத் தமிழரின் இன இருப்புக்கும் பாதகம் விளையும் என்பதை உணர்ந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை உருவாக்கி தமிழர் பண்பாட்டை பாதுகாக்க முனைந்தார்.

இன்று சில இளையோர், செல்வநாயகமும் தமிழரசுக்கட்சியினரும் தமிழர் பண்பாட்டு சிதைவுக்கான எதிர்ப்பையே தமிழ்த்தேசியமாக நிறுவனப்படுத்தினரே அன்றி தமிழர் பண்பாடு தொடர்பில் அவர் கவனம் செலுத்தவில்லை எனக் குற்றம்சாட்டுகின்றனர். எனினும் அவர்கள் ஓர் அடிப்படை புரிதலைப் பெற்றுக் கொள்ளவேண்டும். தமிழ்த் தேசியம் என்பது தமிழர் பண்பாட்டில் இருந்தே உருப்பெறுகின்றது. தமிழர் பண்பாட்டினை நாம் வேர் எனக் கொண்டால் அந்த வேரில் முளைத்த விருட்சமே தமிழ்த்தேசியம்.

### தமிழர் பண்பாட்டை பாதுகாப்பதில் செல்வநாயகம்

1949 ஆம் ஆண்டு கல்லோயா குடியேற்றத் திட்டத்தினூடாக ஈழத் தமிழர் நிலம் அபகரிக்கப்படுவதை தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சியினர் கடுமையாக எதிர்த்தனர். இது தமிழ்மக்களின் பண்பாட்டு நிலதொடர்ச்சி அழிப்புக்கான திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் என்பதை தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்தினர். தமிழ்மக்களின் பண்பாட்டை பாதுகாக்க ஈழத் தமிழரின் தாயக நிலம் பாதுகாக்கப்படவேண்டிய அவசியம் பற்றிய புரிதலை ஏற்படுத்தினர். இந்தப் புரிதலின் வெளிப்பாடே ஈழத்தமிழர்களை நில உரிமைக்காக அரசியல் ரீதியாகவும் பின்னர் ஆயுத ரீதியாகவும் போரிடும் சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தது. இந்தக் கடந்தகால வரலாறு தந்தை செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சியினர் தமிழரின் பண்பாட்டு நிலத்தொடர்ச்சியை பாதுகாத்து தமிழர் தேசத்தை வரையறை செய்யவும் பெரும் பங்காற்றினர் என்பதைப் புலப்படுத்துகின்றது.

இரண்டாவது, 1956 ஆம் கொண்டு வரப்பட்ட தனிச்சிங்களச் சட்டத்தை தமிழரசுக் கட்சியினர் கடுமையாக எதிர்த்தனர். தமிழர் பண்பாட்டின் ஆணி வேராக கருதப்படும் மொழி அரச நிறுவனங்களில் பயன்படுத்த மறுக்கப்படுவது, தமிழ்மொழி சிதைவுக்கு வழிவகுத்து எதிர் காலத்தில் தமிழர் பண்பாட்டை இல்லாதொழித்து விடும் என்பதை தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் நன்கறிந்திருந்தனர். எனவே தமிழ்மக்கள் மனதில் தமிழ்மொழிப் பற்றை விதைத்து தனிச்சிங்களச் சட்டத்துக்கு எதிராக தமிழ்மக்கள் போராட்டங்களை மேற்கொள்ள தமிழரசுக் கட்சியினர் தயார் செய்தனர். பல போராட்டங்கள் நடத்தினர். இதன் பலனாக தமிழ்மொழி அரச கரும மொழியா [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராப் பண்பாட்டுக் கூறுகளில் முதன்மையான மொழி சார் பண்பாட்டை தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சியினர் பாதுகாத்தனர்.

அண்மையில் தந்தை செல்வாவின் 47 ஆண்டு நினைவுதினத்தில் உரையாற்றிய தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளைத் தலைவர் குகதாசன், தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாற்றை மீள் ஞாபகப்படுத்தி இருந்தார்.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தந்தை செல்வா கிறிஸ்தவ பாடசாலை ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் அவ்வப்பொழுது தமிழர் பண்பாடு ஆடையாகிய வெட்டி சட்டை அணிந்து பாடசாலைக்குச் சென்றார் என்றும், இதை பாடசாலை அதிபர் விரும்பாத காரணத்தால், தனது பள்ளி ஆசிரியர் பணியைத் துறந்தார் என்பதும் தான். அத்தோடு தந்தை செல்வா தனது திருமண நாளில் தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் வேட்டி சட்டை அணிந்து வந்தமை மணமகள் வீட்டார் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியது. இந்த இரு நிகழ்வுகளையுமே அவர் மீள் ஞாபகப்படுத்தினார்.

இவ் இரு நிகழ்வுகளும் எமக்கு தந்தை செல்வநாயகம் அரசியலுக்காக தமிழ்த்தேசியம் பேசியவர் அல்லர். அவர் உள்ளத்தில் தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாக்கவேண்டும் என்ற தமிழினப்பற்று அவர் அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கு முன்னரே குடிகொண்டிருந்ததை வெளிப்படுத்துகின்றது.

அவ் உணர்வே தந்தை செல்வாவை தமிழரின் பண்பாடு அடையாள்ங்களை கடைப்பிடிக்கத் தூண்டியது. அதுவே பின்னாளில் தமிழர் பண்பாட்டைப் பாதுகாக்க மதத்தை கடந்து, சிங்கள அரசுக்கு எதிராக தமிழர் பாண்பாட்டை வெளிப்படுத்தும் நந்திக் கொடியை கையில் ஏந்தி அகிம்சை வழியில் தந்தை செல்வாவை போரிட வழியமைத்துக் கொடுத்தது.

அமிர்தலிங்கமும், செ.இராசதுரை போன்றோரும் தம் உணர்ச்சிமிக்க பேச்சுகள் மூலம் தமிழர் பண்பாட்டைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றி தமிழ் மக்களுக்கு எடுத்துரைத்தனர். இப்பேச்சுகள் தமிழின உணர்வை தமிழ்மக்கள் மனதில் உருவாக்கியது. அதிலும் அமிர்தலிங்கத்தின் பேச்சால் கவரப்பட்ட அதிகளவான இளையோர் தமிழர் பண்பாட்டை பாதுகாக்கும் தமிழ்த்தேசியவாதிகளாக உருமாறினர்.

### ஈழத் தமிழரின் கலை இலக்கியப் பண்பாட்டு வளர்ச்சி

ஈழ வரலாற்றில் சேர். பொன் அருணாச்சலம் காலம் தொடக்கம் அமிர்தலிங்கம் காலம் வரை பலர் தமிழர் கலை இலக்கிய பண்பாட்டு வளர்ச்சிக்காக அரும்பணி ஆற்றியுள்ளனர்.

ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்தர், சோமசுந்தரப் புலவர், சேவியர் தனிநாயகம் அடிகள் , கா.சிவத்தம்பி, கல்லடி வேலுப்பிள்ளை, வி.வி. வைரமுத்து என அப் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். இவ்வாறான பல தமிழ்பண்பாட்டு பாதுகாவலர்களின் பலனாகவே அன்று ஈழத்தில் தமிழர் பண்பாடு பாதுகாக்கப்பட்டது.

எட்வர்ட் பர்னட் டைவரின் கூற்றுப்படி ஒரு பண்பாட்டின் இப்போதைய நிலையை அதன் முந்தைய கால கட்டத்தோடு ஒப்பிடுவதன் வாயிலாக பண்பாடு படிமலர்ச்சி நிகழ்வின் தன்மையைப் புரிந்து கொள்ளமுடியும் எனக் கூறுகின்றார். அதன்படி தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம் காலத்தில் தமிழர் பண்பாடு அருணாசலம், இராமநாதன் காலத்தில் பாதுகாக்கப்பட்டதை விட உயர்வாக பாதுகாக்கப்பட்டது எனும் முடிவைப்பெறலாம்.